பக்கங்கள்:-26

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | சித்திரை 22 | ஞாயிற்றுக்கிழமை | 05.05.2024 | அதிர்வு 278

## போலி வைத்தியர்களை கைது செய்ய நடவடிக்கை

போலி சான்றிதழ்களைப் பயன்படுத்தி மருத்துவ நிலையங்களை நடத்தி வரும் போலி வைத்தியர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. 07

# யாழில் பொது வேட்பாளர் கலந்துரையாடல் இலங்கைத் தமிழரசுக் கட்சியினரும் பங்கேற்பு

## இரண்டு வார கால அவகாசம் கோரினார் மாவை





(எஸ்.நிதர்ஷன்)

ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பிலிருந்து ஒருவரைப் பொது வேட்பாளராகக் களமிறக்குவது தொடர்பில் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள சிவில் அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் இணைந்து யாழ்ப்பாணத்தில் கலந்துரையாடினர்.

சிவில் அமைப்புக்களின் ஏற்பாட்டில் யாழ். நகரிலுள்ள ஹோட்டலொன்றில் நேற்று மாலை 3 மணியளவில் 07

# தமிழரசின் நிலைப்பாட்டை கேட்ட பின்பே இறுதி முடிவு

## பொது வேட்பாளர் கூட்டம் குறித்து செல்வம் அடைக்கலநாதன் கருத்து




(எஸ்.நிதர்ஷன்)

தமிழர் தரப்பிலிருந்து பொது வேட்பாளரை நியமிப்பது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிலைப்பாட்டை இரண்டு வாரங்களில் கேட்ட பின்னர்தான் ஒட்டுமொத்தமாக இறுதித் தீர்மானம் எடுக்கவுள்ளோம் என்று ரெலோவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். 07

# எட்கா ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடுகின்ற ஏற்பாடுகள் இரகசியமாக முன்னெடுப்பு

## விமல் எம்.பி. குற்றச்சாட்டு



“இலங்கையின் இறையாண்மையை இந்தியாவுக்குக் காட்டிக்கொடுப்பதற்கு ஆட்சியாளர்கள் தயாராகி வருகின்றனர். எட்கா உடன்படிக்கையைக் கைச்சாத்திடுவதற்குரிய ஏற்பாடுகளும் இரகிசயமாக இடம்பெறுகின்றன.”

– இவ்வாறு உத்தர லங்கா சபாகயவின் தலைவர் விமல் வீரவன்ஸ எம்.பி. தெரிவித்தார்.

அத்துடன், இரண்டாவது சுதந்திரப் 07




ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் மாவை சேனாதிராஜா தலைமையிலான இலங்கைத் தமிழரசுக் கட்சி தனது மத்திய குழுவைக் கூட்டி ஆராய்ந்து, ஒரு முடிவைச் சொல்லுமாம். அதை வைத்துக்கொண்டு அடுத்த கட்ட தீர்மானத்தை ஏனைய தமிழ்த் தேசிய கட்சிகள் சேர்ந்து எடுத்து, தொடர் நடவடிக்கைகளை முன்னெடுப்பார்களாம்.

தாம் கட்சித் தலைவராகி இந்த மாதத்துடன் 10 வருடங்கள் கடக்கும் நிலையில், அதற்குப் பின்னர் கட்சியின் இரண்டாவது தேசிய மாநாட்டை கூடக் கூட்டுவதற்கு வக்கற்ற – கையாலாகாத – தலைவர் மாவை சேனாதிராஜா. 07





# நாட்டு மக்களுக்கு காணி உறுதிகள் வழங்குவதற்கு அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கை புரட்சிகரமானது

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

“நாட்டு மக்களுக்கு காணி உறுதிகளை வழங்க அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் வேலைத்திட்டம் புரட்சிகரமானதாகும். இதுவரையில் உலகின் எந்தவொரு நாட்டிலும் இவ்வாறானதொரு திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பொலன்னறுவை மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்ற மகாவலி குடியிருப்பாளர்களுக்கு உறுமய வேலைத் திட்டத்தின் கீழ் காணி உறுதிகள் வழங்கும் நிகழ்விலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவிக்கையில் –

“இந்த அரங்கில் இருக்கும் அனைவரும் அனுமதி பத்திரங்களுடன் மாத்திரமே வந்திருக்கிறீர்கள். ஆனால் நீங்கள் இங்கிருந்து வெளியேறும் போது காணி உரிமையாளர்களாக செல்வீர்கள். உங்கள் காணிக்கு நிரந்தர உரித்து கிடைக்கும். நமது சமூகத்தில் காணி உரிமை கௌரவமாக பார்க்கப்படுகிறது. காணியின் பெறுமதி எமக்கான அந்தஸ்தாகவும் மாறும்.

இந்நாட்டில் பெருமளவானர்களுக்கு அவர்கள் பரம்பரையாக வசித்த காணிக்கு சட்டபூர்வமான அனுமதி கிடைக்கவில்லை. உறுமய திட்டத்தின் கீழ் அந்த காணிகளுக்கான உறுதிகள் வழங்கப்படும். அதன் பின்னர் நீங்கள் எவருக்கும் அடிபணிய வேண்டியதில்லை. உங்களுக்கு கிடைக்கும் நிரந்தர காணி உரிமையை இரத்துச் செய்யவும் அதிகாரம் இல்லை.

நாம் அனைவரும் கடந்த மூன்று வருடங்களில் பெரும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தோம். நாட்டின் பொருளாதாரத்தைப் போலவே நமது பொருளாதாரமும் சரிவடைந்தது. கைகளில் பணம் இருக்கவில்லை. அனைவரும் கஷ்டங்களுடன் வாழ்ந்தனர். தற்போது பொருளாதார நெருக்கடிகளுக்கு நாம் படிப்படியாக தீர்வு கண்டு வருகிறோம். இன்னும் இரண்டு மூன்று வருடங்களுக்கு இந்த வேலைத்திட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பை வழங்க முடிந்தது. தனியார் துறையிலும் பல நிறுவனங்கள் சம்பள அதிகரிப்புச் செய்தன. தோட்ட தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கான கட்டளையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் நாட்டின் வறிய மக்கள் முன்னேற்றங்களை நோக்கிச் சென்றனர். அதற்கான நாம் அஸ்வெசும வேலைத்திட்டத்தை செயற்படுத்தினோம். அதற்காக உலக வங்கியின் உதவி கிடைத்ததோடு, சமூர்த்தியின் நன்மைகளை மூன்று மடங்காக அதிகரித்தோம். பயனாளிகள் எண்ணிக்கையும் 18 முதல் 24 லட்சமாக அதிகரிக்கப்பட்டது.

குறைந்த வருமானம் ஈட்டும் குடும்பங்களுக்கு தமிழ், சிங்கள புத்தாண்டு காலத்தில் 10 கிலோ அரிசு பகிர்ந்தளிக்கப்பட்டது. இத்தோடு நாட்டில் வளர்ச்சி காணும் பொருளாதாரத்தின் நலன்களை ஒரு தரப்பினர் மாத்திரதே அனுபவித்தனர். அது ஏனைய தரப்பினருக்கும் சென்றடைய வேண்டும். அந்த நோக்கத்திலேயே தற்போது அரசாங்கம் அனைவருக்கும் காணி உறுதிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

மக்களுக்கு காணி உறுதிகளை வழங்க அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் வேலைத்திட்டம் புரட்சிகரமானது. உலகின் வேறு எந்தவொரு நாட்டிலும் இவ்வாறான திட்டங்கள் செயற்படுத்தப்படவில்லை. நாம் மிகப்பெரிய புரட்சியை செய்திருக்கிறோம். விவசாயத்திற்காக மாத்திரமின்றி, வீட்டு உரிமைகளையும் வழங்கியிருக்கிறோம். மாடிக் குடியிருப்புகளில் வசிப்போருக்கும் வீட்டு உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதனாலேயே இந்த திட்டத்தை உலகின் புரட்சிகர திட்டமெனக் கூறுகிறோம். இத்திட்டம் நாட்டு மக்களுக்கான விடுதலையாகும்.

(3ஆம் பக்கத் பார்க்க...)













# நாட்டு மக்களுக்கு காணி உறுதிகள் வழங்குவதற்கு அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கை புரட்சிகரமானது

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(2ஆம் பக்கத் தொடர்ச்சி...)

காணி உறுதியை துரிதமாக தயாரிப்பது குறித்து அமைச்சரவையிலும் ஆலோசித்தோம். பிரதமர் இந்த பணிகளைப் பொறுப்பேற்றுள்ளார். அது தொடர்பில் தேடியறிந்து பணிகளை முன்னெடுக்குமாறு மாவட்ட அபிவிருத்திக் குழுக்களுக்கும் அறிவுறுத்தியுள்ளோம். இந்த வேலைத்திட்டம் இரு மாதங்களுக்குள் நிறைவு செய்யப்படவுள்ளது. காணி ஆணையாளர் அலுவலகம், மகாவலி அமைச்சு, அளவையியல் திணைக்களம், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு, மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் இணைந்து இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

இந்த காணிகளை பெற்றுக்கொண்டதன் பின்னர் அரசாங்கத்தின் விவசாய நவீனமயப்படுத்தல் வேலைத்திட்டத்துடன் இணைந்துகொள்வது உங்களது பொறுப்பாகும். நாட்டின் பொருளாதாரத்தை நவீனமயப்படுத்தி போட்டித் தன்மை நிறைந்த ஏற்றுமதி பொருளாதாரத்தை நோக்கி நாட்டை நகர்த்த வேண்டிய பொறுப்பு நம்மிடம் உள்ளது.

விவசாய நவீனமயப்படுத்தல் செயற்பாடுகளை அரசாங்கம் முதன்மைத் திட்டமாக கருதி செயற்படுத்தும் நிலையில் அதற்குரிய ஒத்துழைப்புக்களை வழங்குவது தொடர்பில் ஆராய்வதற்கான ஜப்பானின் வெளிவிகார அமைச்சர் இன்று நாட்டுக்கு வரவுள்ளார். அதேபோல் அந்த வேலைத் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து தேடியறிந்து அடுத்த மூன்று, நான்கு மாதங்களுக்குள் வேலைத்திட்டத்தை செயற்படுத்துவதற்கான ஒத்துழைப்புக்களை வழங்கும் நோக்கில் உலக வங்கியின் பிரதிநிதிகளும் ஜுன் மாதத்தில் இலங்கை வரவுள்ளனர். அதற்கான திட்டங்களை சமர்பிக்க வேண்டியிருப்பதால் இதனை சட்டபூர்வமாக மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளோம். அதன்படி நாட்டை முன்னேற்றிச் செல்ல நாம் முயற்சிக்க வேண்டும்.

இந்த வேலைத்திட்டத்துடன் அனைவரும் ஒன்றுபட வேண்டும். பொலன்னறுவையை நாட்டின் பிரதான ஏற்றுமதி மாவட்டமாக மாற்றியமைக்க முடியும். அதற்கான வேலைத் திட்டங்களை நாம் தற்போது செயற்படுத்தியுள்ளோம். 76 வருடங்களாக என்ன செய்திருக்கிறீர்கள் எனச் சிலர் கேட்கிறார்கள். நீர்பாசன திட்டங்கள், மின் உற்பத்தி நிலையங்கள் என்பவற்றை ஏற்படுத்தி விவசாயிகளை உருவாக்கி நாட்டை அரிசியில் தன்நிறைவடையச் செய்திருக்கிறோம்.

இருப்பினும் இந்த பகுதிகளை வந்து சேராமல் இருக்கும் அபிவிருத்திகளை ஏற்படுத்த நான் பொறுப்பேற்கிறேன். அதற்காக ஒன்றுபடுமாறு அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறேன்."– என்றார்.












பேராசிரியர் சு.வித்தியானந்தன்
நூற்றாண்டு விழா
காலம் : 11.05.2024, 12.05.2024
இடம் : யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி



# தேசிய டிப்ளோமா தகவல் தொழில்நுட்ப கற்கைநெறி திருமலை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் தொடரும்

## நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் நடவடிக்கை





**(அப்துல்சலாம் யாசீம்)**

திருகோணமலை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் (ATI) இடைநிறுத்தப்பட்டுள்ள உயர் தேசிய டிப்ளோமா தகவல் தொழில்நுட்ப கற்கைநெறியை (HND IT) மீண்டும் நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

திருகோணமலை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் உயர் தேசிய டிப்ளோமா தகவல் தொழில்நுட்ப கற்கைநெறி நிறுத்தப்பட்டுள்ள விடயம் தொடர்பாக உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர் குழு நேற்றுத் தன்னை நேரில் சந்தித்துத் தெரிவித்ததாகவும், மாணவர்களது எதிர்காலம் பாதிக்கப்பட இடமளிக்ககூடாது என்பதால் உடனடியாக இவ்விடயம் தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தாம் பேசினார் எனவும், இதன்போது கற்கைநெறியைத் தொடர்ந்து நடத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பார் என அமைச்சின் செயலாளர் தன்னிடம் உறுதியளித்தார் எனவும் தெரிவித்தார்.

திருகோணமலை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் கணக்கியலுக்கான உயர் தேசிய டிப்ளோமா, ஆங்கிலத்திற்கான உயர் தேசிய டிப்ளோமா, சுற்றுலாத்துறைக்கான உயர் தேசிய டிப்ளோமா கற்கைநெறிகளுடன் சேர்த்து தகவல் தொழில்நுட்ப உயர் தேசிய டிப்ளோமா கற்கைநெறியும் கற்பிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் தகவல் தொழில்நுட்ப கற்கைநெறிக்கான விரிவுரையாளர் இல்லாத காரணத்தினால் இலவச, முழு நேரத்திற்குரிய தகவல் தொழில்நுட்ப கற்கைநெறி இடைநிறுத்தப்பட்டிருந்தது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து மாணவர்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு எச்சரிக்கை!

## வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு

கற்பிட்டியில் இருந்து கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்பில் இன்றைய தினம் கடல் அலை மேலெழுக் கூடுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, அந்த கடற்பரப்பில் 2.5 மீற்றர் முதல் 3 மீற்றர் வரையான உயரத்திற்கு கடல் அலை மேலெழக் கூடுமென அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனவே இந்தக் கடற்பரப்புகள் கொந்தளிப்பாக காணப்படும் என்பதுடன் அந்த பகுதியில் கடல்சார் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் அவதானமாக செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.



# மன்னாரில் பிரதான வீதிகளின் ஓரங்களில் கொட்டப்படுகின்ற மருத்துவக் கழிவுகள்





**(மன்னார் நிருபர்)**

மன்னார் பிரதேச சபைக்கு சொந்தமான மன்னார் – தலைமன்னார் பிரதான வீதி ஓரங்களில் மருத்துவ கழிவுகள் உட்பட பொலித்தீன் கழிவுகள் முறையற்றவிதமாக கொட்டப்பட்டுள்ளமை சுகாதாரச் சீர்கேட்டை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக வீதி ஓரங்களில் பொலித்தீன் பைகளால் சுற்றப்பட்டு பெருமளவு குப்பைகள் வீதி ஓரங்களில் பல்வேறு இடங்களில் கொட்டப்பட்டுள்ளன. அவை காற்று காரணமாக முழு பகுதியிலும் பரவி, நிறைந்து காணப்படுகின்றன. மிருகங்களும் அவற்றை உண்ணும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக மருத்துவ கழிவுகளும் முறையற்ற விதமாக கொட்டப்பட்டுள்ளமையை அவதானிக்க கூடியதாக உள்ளது.

மாவட்டத்தின் பிரதான வீதியில் இவ்வாறான குப்பைகள் நீண்ட காலமாக கொட்டப்பட்டு வருவதை மன்னார் பிரதேச சபை கவனத்தில் கொள்ளாமல் குப்பைகளை அகற்றாமல் செயற்படுவதாகக் கூறப்படுகின்றது.

பொலித்தீன் பைகள், பிலாஸ்ரிக் போத்தல்கள் அதிகளவு கொட்டப்பட்டு காணப்படுகின்ற நிலையில் அவ்வப்போது பெய்யும் மழையின் போது டெங்கு நுளம்புகளும் பெருகக் கூடிய வாய்புக்கள் காணப்படுகின்றன.

எனவே அப்பகுதியில் கொட்டப்பட்டுள்ள குப்பைகளை உரிய விதமாக அகற்றுவதுடன் அப்பகுதிகளில் குப்பைகளை கொட்டும் நபர்களுக்கு எதிராக பிரதேச சபை மற்றும் சுகாதார ஊழியர்கள் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனப் பொது மக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.



### அம்பாறை பதியத்தலாவையில் வெள்ளியிரவு சம்பவம்

# சிப்பாயின் மனைவியுடன் கள்ள உறவில் ஈடுபட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி மீது செமத் தாக்குதல்

## படுகாயங்களுடன் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்ப்பு

**(கனகராசா சரவணன்)**

அம்பாறை பதியத்தலாவையில் தனது மனைவியுடன் திருமணம் கடந்த உறவில் ஈடுபட்ட பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி மீது இராணுவச் சிப்பாய் மேற்கொண்ட தாக்குதலில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி படுகாயமடைந்த நிலை யில் பதுளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்ட சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு சரணகம பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுபற்றி தெரியவருவதாவது:-

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கும் இராணுவச் சிப் பாயின் மனைவிக்கும் இடையே ஏற்பட்ட காதலையடுத்து அந்தப் பெண்ணின் வீட்டிற்கு நேற்று முன்தினம் இரவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சென்று சல்லாபத்தில் ஈடுபட்டார் எனக் கூறப்படுகின்றது. அச்சமயம் அங்கு சென்ற இராணுவச் சிப்பாய் ஆத்திரத்தில் தனது மனைவி மீதும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மீதும் சரமாரியாக தாக்குதலை மேற் கொண்டார். அவர்கள் இருவரும் படுகாயமடைந்ததையடுத்து இராணுவச் சிப்பாய் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளார்.

படுகாயமடைந்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் பெண்ணும் மஹியங்கனை வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டனர். பொலிஸ் நிலைய

பொறுப்பதிகாரி மேலதிக சிகிச்சைக்காக பதுளை வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டு அதிதீவிர 07




## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்சி விவகாரம் சர்ச்சையில் சிக்கி மூன்று மாதங்கள் கடந்தும், கட்சியின் மத்திய குழுவை கூட்டும் அடிப்படை பொறுப்பும் வலிமையும் அற்ற தலைவர் அவர். அன்னை பூபதி நினைவு தினம், சித்ரா பௌர்ணமி தினம் என்று தேடித்தேடி சிக்கல் நாள்களில் கூட்டத்தைக் கூட்ட திகதி நிர்ணயம் செய்து, அதை நிரந்தர மாக தள்ளி வைக்கச் செய்து, நீதிமன்ற விவகாரத்தில் கட்சி ரீதியாக ஒரு ஏக முடிவெடுக்க அனுமதிக்காமல் பார்த்துக் கொண்ட பிரகிருதி அவர்.

அடுத்த இரண்டு வாரம் என்று இப்போது அவர் கதை விட்டு விட்டு வந்தாலும் அந்த இரண்டு வாரங்களும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் 15 ஆம் ஆண்டு நிறைவின் சூடுமிகுந்த காலம். தொடர்ந்து வருவது வெசாக். சிங்களக் கொண்டாட்டம் என்றாலும் தமிழிலும் வைகாசி விசாகத் திருநாள் வருகின்றதே. இவை போதாதா இரண்டு வாரங்களை இரண்டு மாதங்களாக மாவை இழுத்தடிப்பதற்கு?

பொது வேட்பாளர் திட்டம் என்பது மிகுந்த ஆபத்தான அசிட் டெஸ்ட். நலிந்திருக்கும் தமிழினத்தின் – தமிழ்த் தேசியத்தின் உயிர்ப்பில் – கரணம் தப்பினால் மரணம் என்ற விவகாரம்.

அதை எதிர்ப்பதிலும் பார்க்க, அந்த விஷப் பரீட்சையில் தமிழினத்தை தள்ளக் காரணமானவர்களை – ஒருவர் விடாது – பட்டியலிட்டு, கடைசித் தேர்தல் நாள் வரை அவர்களின் விவரங்களை ஒழுங்குபடுத்தி, மக்களுக்கு நினைவூட்டும் விதத்தில் அடிக்கடி வெளிப்படுத்திக் கொண்டிருப்பதே முக்கியமானது.

தமிழினத்தை விஷப் பரீட்சையில் பாஸ் பண்ண வைக்காமல் அவர்கள் ஓடி ஒளிக்க முடியாது என்ற நிலைமையை உறுதிப்படுத்த வேண்டும்.

தமிழினத்தை வெற்றியடைய வைத்து விட்டார்கள் எனின், அவர்களைத் தானைத் தலைவர்களாக்குவோம். தலைகுனிய வைத்து விட்டார்கள் எனில் பொது வாழ்வில் இனித் தலை காட்ட விடாது செருப்படி கொடுத்துக் கலைப்போம்.

அதற்காக, இந்த முயற்சியை – விஷப் பரீட்சையை – முன்னெடுக்கும் பிரகிருதிகளை அவ்வப்போது பட்டியலிட்டு, அம்பலப்படுத்தி, நினைவு படுத்திக் கொண்டிருப்பது அத்தகைய சூழலில் நமது கடமையாகின்றது.

எதிர்க்கப் போக வேண்டாம். பிற்காலத்தில் (நீண்ட காலத்தில் அல்ல,அடுத்த ஐந்து மாதத்தில்) விஷப்பரீட்சை முடிவு வந்து, அது தோற்று விட்டால், அது இந்த விடயத்தை எதிர்த்தவர்களால் வந்தது என்று பொறுப்பை நம் தலையில் சுமத்தி விடுவார்கள்.

நீதியரசர் விக்னேஸ்வரனில் இருந்து, சிவில் குழுவை ஒழுங்கு படுத்தியவர்கள் வரை எல்லோர் பெயர் விவரங்களையும் வரிசைப்படுத்தி விளம்பரப்படுத்துவதுடன், ஒதுங்கி நின்று விடயங்களை பார்ப்பதுதான் நல்லது. வென்றால் அதன் சிறப்பும் பெருமையும் அந்த வீரர்களுக்கு போகட்டுமே. அதில் என்ன தப்பு?தோற்றால் அவர்கள் தமிழ்த் தேசியத்தை ஏலம் விடுவதில் இருந்து ஓடி ஒளிக்கட்டுமே. அதுவும் பொருத்தம் தானே...!

## யாழில் பொது வேட்பா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒன்றுகூடிய சிவில் சமூகப் பிரதிநிதிகளும், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் சுமார் நான்கு மணித்தியாலங்கள் பொது வேட்பாளர் தொடர்பில் ஆராய்ந்தனர்.

இதன்போது முதலில் தமிழர் தரப்பிலிருந்து ஒருவரைப் பொது வேட்பாளராக நிறுத்துவது தொடர்பிலும், அவ்வாறு நிறுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் கலந்துரையாடப்பட்டதுடன் சில இணக்கப்பாடுகளும் பொதுவாக ஏற்படுத்தப்பட்டன.

பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் வடக்கு, கிழக்கிலுள்ள சிவில் சமூக அமைப்புக்களும், பல கட்சிகளும் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை நடத்தி வருகின்ற அதேவேளையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய இரண்டு கட்சிகளும் இதுவரை காலமும் இந்தக் கூட்டங்களில் கலந்துகொள்ளாமல் இருந்து வந்தன.

இந்நிலையில் இந்தப்பொதுவேட்பாளர் தொடர்பான நேற்றைய கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் இணைந்து கொண்டதுடன் அக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவும் கட்சியின் ஏனைய சில முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனாலும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நேற்றைய கூட்டத்திலும் கலந்து கொள்ளவில்லை. அந்தக் கட்சியினர் ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்றே தொடர்ந்தும் கோரி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும், நேற்றைய கூட்டத்தின்போது தமிழர் தரப்பில் இருந்து ஒருவரைப் பொது வேட்பாளராக நிறுத்துவதற்குப் பொதுக் குழு ஒன்றை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் ஆராயப்பட்டது.

இதற்கமைய பொதுக்குழு அமைப்பதற்குத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா இரண்டு வார கால அவகாசம் கோரியிருந்தார். அதனால் பொதுக்குழு அமைப்பதை இரண்டு வார காலத்துக்கு ஒத்திவைத்து கூட்டம் நிறைவடைந்தது.

இந்தக் கூட்டத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள பல்வேறு சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள தமிழ்த் தேசிய மக்கள முன்னணியைத் தவிர ஏனைய அனைத்துக் கட்சிகளினதும் தலைவர்கள் மற்றும் அதன் பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழரசின் நிலைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வடக்கு, கிழக்கு சிவில் அமைப்புக்களுக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும் இடையில் தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில் யாழ். நகரில் நேற்று மாலை நடைபெற்ற கலந்துரையாடலின் முடிவில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"தமிழ்த் தேசியக் கட்சிகளும் சிவில் அமைப்புக்களும் இணைந்து தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில் கலந்துரையாடியிருக்கின்றோம்.

இதற்கமைய தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில் அடுத்த கட்டமாக இறுதி முடிவு எடுப்பது குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

அதாவது எந்தெந்தக் கொள்கைகளை வகுத்து எவ்வாறு போட்டியிடுவதற்கான வாய்ப்புகளை உருவாக்குவது என்பது சம்பந்தமாக இரண்டு வாரங்களில் இறுதி முடிவெடுப்பதற்குத் தீர்மானித்துள்ளோம்.

இதற்கமைய அடுத்த கூட்டத்திலே கட்டமைப்புக்களை உருவாக்கி எவ்வாறு செயற்படுவது என்பது தொடர்பிலும் இறுதித் தீர்மானம் எடுத்து அடுத்த கட்டத்துக்குச் செல்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் எந்தக் கொள்கையோடு பொது வேட்பாளரை நிறுத்துவது என்றும் இரண்டு வாரங்களுக்குப் பின்னர் இறுதி முடிவை எடுக்கவுள்ளோம்.

இந்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டபோது இது தொடர்பில் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தத் தமிழரசுக் கட்சி இரண்டு வாரங்கள் கால அவகாசம் கேட்டுள்ளனர்.

அதனடிப்படையில் அவர்களுடைய கருத்தைக்கேட்டபின்னர்தான்ஒட்டுமொத்தமாக இறுதி முடிவை எடுப்பதற்காக இரண்டு வாரங்களுக்குப் பிறகு இந்தக் கூட்டத்தை நடத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது." – என்றார்.

## போலி வைத்தியர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மற்றும் பொலிஸ்மா அதிபர் தேஷபந்து தென்னக்கோன் உள்ளிட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் குழுவுடன் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் பின்னர் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வைத்தியர்களுக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இலச்சினையுடன் கூடிய ஸ்டிக்கரை சிலர் தமது வாகனங்களில் காட்சிப்படுத்தி அதனைத் தவறாகப் பயன்படுத்துகின்றனர் என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதன்படி, அத்தகைய நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

## எட்கா ஒப்பந்தத்தைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போராட்டத்தை ஆரம்பிக்க மக்கள் உத்தர லங்கா சபாகயவுடன் கைகோர்க்க வேண்டும் எனவும் அவர் அறைகூவல் விடுத்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் விமல் வீரவன்ஸ எம்.பி. மேலும் கூறியதாவது:–

"இலங்கையில் என்றுமில்லாதவாறு பொருளாதார கேந்திர முக்கியத்துவ–மிக்க இடங்களை விற்பனை செய்யும் நிலை காணப்படுகின்றது. இலங்கை மின்சார சபையை 12 கூறுகளாகப் பிரித்து இந்திய நிறுவனங்களுக்கு விற்பதற்குத் தயாராகின்றனர்.

இலங்கையையும், இந்தியாவையும் இணைப்பதற்குரிய பாதை பற்றியும் பேசப்படுகின்றது. விமான நிலையங்கள் அனைத்தும் இந்தியாவுக்கு வழங்கப்படும் என அமைச்சர் ஹரின் பெர்னான்டோ கூறியுள்ளார். இந்திய ரூபாவை இலங்கையில் பயன்படுத்தக் கூடிய சூழ்நிலை உருவாக்கப்படும். அதே போல இலங்கை மற்றும் இந்திய சுங்கங்களைஇணைப்பதற்குரியசாத்தியம்பற்றியும் பேசப்படுகின்றது.

இவ்வாறு இலங்கையை இந்தியாவின் மாநிலமாக மாற்றுவதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது. இது நாட்டின் இறையாண்மையைக் காட்டிக்கொடுக்கும் செயலாகும்.

எட்கா உடன்படிக்கையின் உள்ளடக்கங்கள் கோரப்பட்டாலும் அவை வழங்கப்படுவதில்லை. இரகசியமான முறையில் உள்ளடக்கங்கள் இடம்பெற்று வருகின்றன." – என்றார்.

## சிப்பாயின் மனைவி...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளைபொலிஸ்நிலையபொறுப்பதிகாரி மீது தாக்குதலை மேற்கொண்ட இராணுவச் சிப்பாய் மஹியங்கனை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தமையையடுத்து பொலிஸார் அவரைக் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை பதியத்தலாவை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## விரைந்து நீதி செய்க!

இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்பிருந்தே, இலங்கையின் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்திய பிரதான தரப்பினர் மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள். மாடாய் உழைத்து, ஓடாய்த் தேய்ந்த அந்த மக்களுக்கு - தொழிலாளர்களுக்கு - இன்னுமே நீதி செய்யப்படவில்லை. இந்தக் கணம் வரை, அவர்கள் வியர்வை சிந்தி உழைப்பதற்கு ஏற்ற ஊதியமோ, வாழ்க்கைக்கான அடிப்படை வசதிகளோ இன்னும் சரிவர வழங்கப்படவேயில்லை.

அவர்கள் கூலித் தொழிலாளர்களாக இலங்கைக்கு அழைத்து வரப்பட்டு இரு நூறு ஆண்டுகளாகியும் அவர்களுக்கு நியாயம் செய்யப்படவில்லை. நீதி வழங்கப்படவில்லை. இது இலங்கையின் வரலாற்றுப் பேரவலம்.

இப்போதும் கூட, அவர்களின் நாள் சம்பளம் தொடர்பாக அரசியல்வாதிகளின் சித்து விளையாட்டு முறையற்ற முறைமையில் தொடர்கின்றது என்பதுதான் வேதனைக் குரியதாகும்.

ஏதோ இந்தத் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரே பிடிவாதமாக நின்று, தன்னுடைய தற்றுணிவின் அடிப்படையில் நாள் சம்பளத்தை 1,700 ரூபாவாகப் பெற்றுத்தந்து விட்டார் என்ற கதை பரப்பும் அரசியல் நாடகங்களே அரங்கேறி இருக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தல் இன்னும் சில மாதங்களில் நடக்க இருக்கையில், அதற்கு முன்னர் இடம்பெறும் மே தினத்தில் வைத்து இந்த ஆரவார நாடகத்தை அரங்கேற்ற திட்டம் தீட்டப்பட்டு காரியங்கள் நடந்திருக்கின்றன என்றே தோன்றுகின்றது.

மே தினத்தன்று காலையில் மலையகத்தில் ஜனாதிபதி தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் பேசப்போகின்றார். அதற்கு முதல் நாள் இரவு அச்சுக்கு போன வர்த்தமானியில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் நாள் சம்பளத்தை 1,700 ரூபாவுக்கு நிர்ணயித்து தொழில் ஆணையாளர் வழங்கிய அறிவித்தல் இடம்பெறுகின்றது. அந்த விடயத்தை காலையில் மே தின நிகழ்வில் பெரும் ஆரவார அறிவிப்புக்களுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுக்கின்றார். ஆக, தேர்தலுக்கு முன்னர் தோட்டத் தொழிலாளர்களின் காதில் பூச்சூற்றும் அரசியல் நாடகம்தான் இது என்பது வெளிப்படையானது.

தொழில் ஆணையாளரின் இந்த அறிவிப்பினால் மலையகத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தினசரி 1,700 ரூபாவாக உறுதிப்படுத்தப்பட்டு விட்டது என்று காட்ட முயற்சிக்கப்பட்டாலும், அது அப்படி அல்ல என்பதுதான் நிலைமை.

தொழில் ஆணையாளரின் இந்த ஒரு தலைப்பட்ச அறிவிப்பை எதிர்த்து இலங்கைத் தோட்ட முதலாளிமார் சம்மேளனம் வரும் 15 ஆம் திகதி வரை ஆட்சேபனைகளை தாக்கல் செய்யலாம்.

இது தொழில் ஆணையாளர் - தொழிற் சங்கப் பிரதிநிதிகள் - முதலாளிமார் பிரதிநிதிகள் ஆகிய முத்தரப்பினரும் ஒரு மேசையிலிருந்து பேசி, இணங்கி, எடுக்கப்பட்ட முடிவே அல்ல.

ஆகவே, நிச்சயம் இணக்கமில்லாத இந்த விடயத்திற்கு எதிராக முதலாளிமார் நீதிமன்றுக்குச் செல்வார்கள். இலங்கையில் நீதிமன்றுக்குச் செல்லும் விடயங்களில் தீர்வு - தீர்ப்பு - எப்போது கிட்டும் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்தான். இந்த விவகாரமும் அதற்கு விதிவிலக்கல்ல.

அண்மைக் காலம் வரை தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயத்துக்குக் கூட்டு ஒப்பந்தம் மூலமே இணக்கத் தீர்வு காணப்பட்டு வந்தது.

அதை முறித்து - மீறி - ஒருதலைப் பட்சமாக முடிவெடுத்திருக்கின்றது அரசு. இதனால் ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் கூட்டு ஒப்பந்தம் மூலம் தொழிலாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய வசதிகள், சலுகைகள், உரிமைகளில் இருந்தும் கூட முதலாளிமார் சம்மேளனம் நழுவி விட வாய்ப்பு உண்டு.

அதேசமயம், தொழில் ஆணையாளர் வர்த்தமானியில் பிரகடனம் செய்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மலையக மே தினக் கூட்டத்தில் ஆரவாரத்துடன் அறிவித்த 1,700 ரூபா சம்பளம் கூட கிடைப்பது இன்னும் உறுதியில்லை. முதலாளிமார் நீதிமன்றுக்குப் போனால் அதுவும் இழுபடும்.

இந்தப் பின்புலத்தில் தெளிவான - உறுதியான - நிலைப்பாடு இல்லாத குழப்பக் கட்டத்தில் அன்றாடம் காய்ச்சிகளாக இருக்கும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களைக் கொண்டு வந்து நிறுத்தி இருக்கின்றது ஆட்சிப் பீடம்.

அவர்களின் வேதனம் தொடர்பான விடயத்தை அந்தரத்தில் தொங்க விடாது, உறுதியான-இறுதியான-முடிவான-தீர்வு குறுகிய காலத்தில் திட்டவட்டமாக ஈட்டச் செய்வது அரசின் கட்டாயம், கடப்பாடு. எந்த வகையிலாவது அரசு அதனை விரைந்து செய்தாக வேண்டும்.

# அரண்மனையில் வசிக்கும் மோடிக்கு விவசாயிகளின் நிலைமை புரியுமா?

## பிரியங்கா காந்தி கேள்வி



"பிரதமர் மோடியை அதிகாரம் சூழ்ந்துள்ளது. சுற்றி இருப்பவர்கள் அவரைக் கண்டு பயப்படுகிறார்கள். அவருக்கு எதிராக யாராவது குரல் எழுப்பினாலும் அந்தக் குரல் அடக்கப் படுவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன."

– இவ்வாறு காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி கடுமையாக விமர்சித்துள்ளார்.

குஜராத் மாநிலம் பனஸ்கந்தா மாவட்டத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி உரையாற்றுகையில்,

"பிரதமர் மோடி எனது சகோதரனை இளவரசர் என்று அழைக்கிறார். ஆனால், காங்கிரஸ் எம்.பி ராகுல் 4,000 கிலோ மீற்றர் நடைப்பயணம் சென்று மக்களை சந்தித்து, அவர்களின் வாழ்வில் என்னென்ன பிரச்சினைகள் உள்ளன என்பதை கேட்டறிந்தார். இதை உங்களிடம் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஆனால், மறுபுறம் பிரதமர் நரேந்திர மோடி எனும் பேரரசரோ அரண்மனைகளில் வசிக்கிறார். நீங்கள் அவரை டி.வியில் பார்த்தீர்களா? அவரது முகம் பளிச்சென்று இருக்கிறது. அவரது வெள்ளை குர்தா ஒரு கறை கூட இல்லாமல் உள்ளது. அவரால் எப்படி சாமானியர்கள், பெண்கள் மற்றும் விவசாயிகளின் கஷ்டத்தை புரிந்து கொள்ள முடியும்? எல்லாப் பொருளுக்கும் ஜி.எஸ்.டி. விதிக்கப்பட்டு, எல்லாமே விலை உயர்ந்து விட்டது. இதெல்லாம் மோடிஜிக்கு புரியாது.

பிரதமர் மோடியை அதிகாரம் சூழ்ந்துள்ளது. அனைவரும் அவரைக் கண்டு பயப்படுகிறார்கள். அவருக்கு எதிராக யாராவது குரல் எழுப்பினாலும் அந்தக் குரல் அடக்கப்படுகிறது. குஜராத் மக்கள் பிரதமர் மோடிக்கு மரியாதையையும், அதிகாரத்தையும் கொடுத்துள்ளனர்.

நீங்கள் அவரை பெரிய தலைவர்களுடன் பார்த்திருப்பீர்கள். ஆனால், பல நாள்களாக விவசாயிகள் போராட்டம் நடத்தினார்கள். ஆனால், பிரதமர் மோடி அவர்களை சந்திக்க செல்லவில்லை. தேர்தல் நெருங்கும் சூழலில், பா.ஜ.கவுக்கு யாரும் வாக்களிக்க மாட்டார்கள் என்பதை உணர்ந்து தேர்தலுக்காக விவசாய சட்டங்களை ரத்து செய்துள்ளார்.

அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் உங்களுக்கு உரிமைகள் கிடைக்கும். வாக்களிப்பது மிகப் பெரிய உரிமை. ஆனால், பா.ஜ.க. அரசியல் சட்டத்தை மாற்ற விரும்புகிறது. அரசியலமைப்புச் சட்டம் மாற்றப்படும் என்று பா.ஜ.கவினர் கூறும்போது, மக்களிடமிருந்து அவர்களின் உரிமைகளைப் பறிக்க நினைக்கிறார்கள் என்பது தெள்ளத் தெளிவாகிறது.

உலகின் தலைசிறந்த ஆளுமையாக விளங்கிய மகாத்மா காந்திஜி குஜராத் மண்ணில் பிறந்தவர். ஸ்ரீ சர்தார் படேல் உள்ளிட்ட பல பெரிய மனிதர்களும் குஜராத் மண்ணில் பிறந்தவர்கள்தான்." – என்றார்.

# இந்திய கடலோர பகுதிகளுக்கு கடல் அலைச் சீற்ற எச்சரிக்கை



தொலைதூர இந்தியப் பெருங்கடலில் இருந்து வரும் உயர் அலை பெருக்கம் காரணமாக இந்தியாவின் கடலோரப் பகுதிகளில் கடல் கொந்தளிப்பாகவும், சீற்றத்துடனும் காணப்படும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் மற்றும் கடல் தகவல் சேவைகளுக்கான இந்திய தேசிய மையம் தெரிவித்துள்ளது.

இந்தக் கடல் சீற்றம் நாளை வரையில் இருக்கும் என்றும், கடலோரப் பகுதிகளில் வசிப்பவர்கள் மற்றும் அதிகாரிகள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மூத்த விஞ்ஞானிடி.பாலகிருஷ்ணன் நாயர் கூறும்போது,

"இந்திய கடற்பகுதியில் இருந்து சுமார் 10 ஆயிரம் கிலோ மீட்டர் தொலைவில் அட்லாண்டிக் பெருங்கடலில் தோன்றிய இந்த உயர் கால அலை பெருக்கம் மெதுவாக தெற்கு இந்தியப் பெருங்கடலை நோக்கி நகர்ந்துள்ளது. இந்த நகர்வு இந்தியக் கடலோர பகுதிகளில் உயர் அலைச் சீற்றங்களுக்கு வழி வகுக்கும்" என்று தெரிவித்துள்ளார்.

"இந்தக் காலகட்டத்தில், கடல் அலைகள் 0.5 மீட்டர் முதல் 2 மீட்டர் வரை உயர்வடையும், கடலோரப் பகுதிகளில் அலைகள் சீற்றத்துடன் இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, தாழ்வாக உள்ள கடலோரப் பகுதிகள் மிகவும் பாதிக்கப்படும். நாங்கள் தொடர்ந்து நிலைமையைக் கண்காணித்து வருகிறோம்." என்று கடல் தகவல் சேவைகளுக்கான இந்திய தேசிய மையத்தின் இணையதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பிரேசிலில் வரலாறு காணாத கனமழை; 39 பேர் பலி, 68 பேரை காணவில்லை











பிரேசிலில் பெய்த கனமழையினால் ஏற்பட்ட அனர்த்தங்களில் 39 பேர் உயிரிழந்துள்ளனர். 68 பேர் காணாமல் போயுள்ளனர்.

பிரேசிலில் பெய்த வரலாறு காணாத மழையால் ஆயிரக்கணக்கானோர் தமது வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை முக்கிய நகரங்களுக்கு இடையில் நீர் மின் நிலையம் உள்ள அணை உடைப்பெடுத்ததில், பள்ளத்தாக்கு பகுதிகளில் உள்ள நகரங்கள் நீரில் மூழ்கின. ஆற்று நீர் பாலம் ஒன்றை அடித்துச்சென்றுள்ளது.

இதனால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 24 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கான வீடுகள் சேதமடைந்துள்ளன.

மாநிலத்தின் பல பகுதிகளில் மின்சாரம், தொலைத்தொடர்புகள் மற்றும் நீர் விநியோகம் என்பன துண்டிக்கப்பட்டுள்ளன.

இணையத்தள மற்றும் தொலைத்தொடர்பு சேவைகள் இன்மையால், மக்கள் அண்டை மாநிலங்களில் உள்ள தமது உறவினர்களை தொடர்பு கொண்டு தகவல்களை பரிமாறிக்கொள்ள முடியாமல் தவிக்கின்றனர்.

பல வீடுகளின் மேற்கூரையில் குழந்தைகளுடன் பலர் உதவிகளுக்காக காத்திருக்கின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தெற்கு பிரேசிலில் 235 நகராட்சிகள் நீரில் மூழ்கியுள்ளன.

# அடையாள அட்டை இன்றி வாக்களிக்கச் சென்ற பொறிஸ் ஜோன்சன் திருப்பி அனுப்பப்பட்டார்




பிரிட்டனில் உள்ளூராட்சி தேர்தலில் வாக்களிப்பதற்காக உள்ளூர் வாக்குச்சாவடிக்கு சென்ற பிரித்தானிய முன்னாள் பிரதமர் பொறிஸ் ஜோன்சன், ஏற்றுக்கொள்ளக்கூடிய புகைப்பட அடையாள அட்டையை கொண்டு வர மறந்ததால், அதிகாரிகளால் திருப்பி அனுப்பப்பட்டார் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பிரித்தானிய உள்ளூராட்சித் தேர்தலுக்கு வாக்களிக்க தனது உள்ளூர் வாக்குச் சாவடிக்குச் சென்றபொறிஸ் ஜோன்சன் இந்தச் சம்பவத்தை எதிர்கொள்ள நேர்ந்தது.

அங்கிருந்து சென்ற பொறிஸ் ஜோன்சன், பின்னர் ஏற்றுக் கொள்ளக்கூடிய அடையாள அட்டையை கொண்டு வந்து வாக்களித்துள்ளார்.

அவரது அரசாங்கமே 2022 இல் வாக்களிக்க அங்கீகரிக்கப்பட்ட புகைப்பட அடையாள அட்டையை கொண்டு வர வேண்டும் என்ற சட்டத்தை இயற்றியது என்பது குறிப்பிடத்தக்கது.

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

# மூடி மறைக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது

## கொழும்புப் பேராயர் குற்றச்சாட்டு

**"உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாது, அதனை மூடி மறைக்க முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆரம்பித்த செயற்பாடுகள், தற்போதைய அரசாங்கத்தில் அதனை விட உயர் மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது."**

**- இவ்வாறு கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரித்துள்ளார்.**



முன்னாள் ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷ அண்மையில் வெளியிட்ட அறிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் விடுத்துள்ள அறிக்கையில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இதனை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை தமக்கு கிடைத்த மறுநாள், தாம் பேராயருக்குத் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தவில்லை என முன்னாள் ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷ தெரிவித்த கருத்தானது முற்றிலும் பொய்யானதெனக் கர்தினால் சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷ தமக்கு அவ்வாறான தொலைபேசி அழைப்பொன்றை ஏற்படுத்தினார் என மீண்டும் உறுதிப்படுத்திய பேராயர், தனக்கு நெருங்கிய அமைப்புகளுக்கு எதிரான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த முடியாதென அந்தத் தொலைபேசி அழைப்பில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறினார் என்றும் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று, தாக்குதலை தடுக்க நடவடிக்கை எடுக்காத பொலிஸ் உயர் அதிகாரிகள் மற்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோருக்கு எதிராக, ஆணைக் குழுவினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப் படுத்த அவரது பதவிக்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படாமை குறித்தும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடம் பேராயர் இதன்போது கேள்வியெழுப்பியுள்ளார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் சில பரிந்துரைகளை தெரிவு செய்து தப்பித்துக் கொள்வதற்காக, கோட்டாபய ராஜபக்ஷ அமைச்சரவை உப குழுவை நியமித்தமையானது, அவற்றை நடைமுறைப்படுத்துவதை விடவும், நடைமுறைப்படுத்தாமல் இருப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்ததாக கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் குற்றப்புலனாய்வுப் பிரிவிற்கு பொறுப்பாக இருந்தவரை மாற்றி, தனக்கு நெருக்கமானவரை அந்த பொறுப்பில் நியமித்ததன் காரணமாக அந்த விசாரணைகள் வலுவிழந்தமை தொடர்பில் தாம் புதிதாகக் கூற வேண்டியது இல்லை எனவும் பேராயர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேபோன்று, ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்துரைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விசாரணை மற்றும் வழக்குகளை முன்னெடுக்காது, உயிர்த்த ஞாயிறு தாக்குதலை மூடி மறைக்க முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆரம்பித்த செயற்பாடுகள், தற்போதைய அரசாங்கத்திலும் அதனைவிட உயர் மட்டத்தில் முன்கொண்டு செல்லப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதல் தொடர்பில் சுயாதீனமான, வெளிப்படையான மற்றும் உண்மையுள்ள விசாரணைகள் விரைவாக முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும், அவ்வாறான விசாரணைகள் மேற்கொள்ளப்படும் வரை அது தொடர்பில் தாம் அவதானத்துடன் செயற்படுவதாகவும் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மருந்து, மருத்துவ உபகரணங்களுக்கு நாட்டில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாம்!

நீரிழிவு, புற்றுநோய், இருதய நோய்கள் உள்ளிட்ட பல நோய்களுக்கு தேவையான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கு தட்டுப்பாடு காணப்படுவதாக அரச மருந்தாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனால் நோயாளர்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளனர் என அரச மருந்தாளர்கள் சங்கத்தின் தலைவர் துஷார ரணதேவ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சுகாதார அமைச்சின் மருந்து விநியோகப் பிரிவின் பிரதி பணிப்பாளர் நாயகம் ஜி. விஜேசூரிய கருத்து தெரிவிக்கையில், வைத்தியசாலைகளில் இதுவரையில் 20 வீதமான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், அதற்கு மாற்று மருத்துகள் நாட்டில் உள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், வைத்தியசாலைகளில் அரிதாக தேவைப்படும் 115 வகையான மருந்துகளுக்கு தட்டுபாடுகள் நிலவுவதாகவும், அவற்றை கொள்வனவு செய்வதற்கான நிதி மற்றும் அனுமதிகளை வைத்தியசாலைகளுக்குப் பெற்றுக்கொடுத்துள்ளதாகவும் வைத்தியர் ஜி.விஜேசூரிய தெரிவித்துள்ளார்.






# முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையும் முகவரியற்ற தமிழினமும்

- வி.எஸ்.சிவகரன் -

சர்வதேச சதி வலைகளின் சகுனித்தனத்தால் தோற்கடிக்கப்பட்டது தேசிய விடுதலைப் போராட்டம் அல்ல. ஆயுதப் போராட்டம்தான்.

விடுதலைப் போராட்டம் பல்வேறு காலகட்டங்களில், பல வடிவங்களில், பல தந்திரோபாயங்களின் அடிப்படையில் இலக்கு நோக்கி வீறு கொண்ட பயணமாக அமைந்திருந்தது.

ஓர் இனம் தன்னைத்தான் ஆள நினைப்பதும், ஆள முனைவதும் எவ்வகையிலும் தவறானது அல்ல.

உணர்வுகளை அடக்குமுறைக்குள்ளாக்குகின்ற போது எழும் பெருவெடிப்பின் எழுச்சியே கிளர்ந்தெழச் செய்யும். உலக ஜீவராசிகள் யாவுக்கும் இது பொது விதியே. கடந்த எழுபது ஆண்டுகளாக உரிமைகள் மறுக்கப்பட்டு வாடகை வீட்டில் குடியிருக்கும் மனநிலையுடன் சதா வெக்கித் தவிக்கும் இனக் குழுமமாகவே தமிழினம் அல்லோலப்படுகிறது. திட்டமிட்டு, குற்றமனத்துடன், இந்திய அரசின் ஆசீர்வாதத்துடன், உலகின் அனுசரணையுடன், நடந்த முள்ளிவாய்க்கால் பேரழிப்பு என்பது இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய மனித இனப்படுகொலை ஆகும்.

மிருகவதைக்குக் கூட இந்த உலகம் வலிமையான உரிமை சார் சட்டங்களை உருவாக்கி வைத்துள்ளது. ஆனால் மனித இனப்படுகொலைக்கு உலகம் பரி நிர்வாணமாக நின்று, சங்கு ஊதி, சாவுமணி அடித்ததே..! உலகின் மனோநிலை என்பது நவீன ஹிட்லரிஸமே. வெறும் கையாலாகாத வெற்று அறிக்கைகளும், மனித உரிமைகள் எனும் போலிக் கவசமும் இந்த உலகில் ஜாடை காட்டி ஏமாற்றுகின்றன. எல்லாமே கோப்பரேட் யுகமாக சென்றுவிட்டது.

நிறவெறியாலும், இன வெறியாலும், மதவெறியாலும் ஒடுக்கப்பட்டு, நசுக்கப்பட்டு, சிதைக்கப்பட்ட எந்த நாட்டையுமோ, எந்த இனக் குழுமத்தையுமோ இதுவரை இந்த உலகம் காக்க வில்லை. மாறாக, பயனற்ற – நடைமுறைச் சாத்தியமற்ற – கனிவு வார்த்தைகளை தத்தமது பிராந்திய நலன்களுக்குள் கவசங்களாக திரையிட்டு ஒளிந்து கொண்டு கூறிக் கொண்டிருந்தது. நீதியை நீக்கம் செய்ய முனையும் வல்லமையற்றோர்களின் போலி வார்த்தைகள் அவை. அதனால் இறுதிவரை நம்பிய தமிழினம் மிகப்பெரிய இனப்படுகொலையையே சந்தித்தது.

தற்போது அந்த இனப்படுகொலைக் கொடூரம் நடந்து பதினைந்து ஆண்டுகள் கடந்துவிட்ட போதும் எந்த மாற்றமும் நிகழவில்லை. தருஸ்மன் அறிக்கை, கற்றுக்கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை, பரணகம ஆணைக்குழு அறிக்கை, ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு போன்றவை எவற்றாலும் இதுவரை ஒரு துரும்பை கூட நகர்த்த முடியவில்லை. நிலைமாறு கால நீதிப் பொறிமுறையால் கூட எதுவும் நிகழவில்லை.



எஸ்.சிவகரன்

காணாமல் ஆக்கப்பட்டோர் போராட்டங்கள் கரைந்து காலாவதியாகும் நிலையில் உள்ளன. சங்கங்களுக்குள்ளும் பல சங்கதிகள் உருவாகிவிட்டன. புலம்பெயர் அமைப்புகளும் உருப்படியாக எதையும் முன்னெடுக்கவில்லை. அவர்களுக்குள்ளும் பிளவுகள் ஏராளம். இங்கே ஈழத்தில் தமக்கு இஷ்டமானவர்களை வைத்து ரிமோட் கண்ட்ரோல் வேலையை பார்க்கிறார்கள். அதனால் எந்த பயனும் ஏற்படப்போவதில்லை. எந்த மாற்றமும் நிகழப் போவதுமில்லை.

தமிழ்த்தேசியம் எனும் வாக்கு கவர்ச்சி அரசியல் பேசும் தேர்தல் மைய அரசியல்வாதிகளால் நிர்ணயிக்கப்பட்ட எந்தக் கட்டமைப்பையும் உருவாக்க முடியவில்லை. உருவாக்கும் வல்லமை வெளிப்படவில்லை. ஆகவே எல்லாம் திரிசங்கு நிலையில் திண்டாடுகின்றன.

தமிழர் அரசியலும் உரிமை சார் உணர்ச்சி நிகழ்வுகளும், இன அழிப்புக்குரிய பொறுப்புக் கூறல் கட்டமைப்புச் செயற்றிட்டத்தை வடிவமிட்டு நகர்த்தக்கூடிய எந்த வல்லாளுமையுள்ள – தீர்க்கதரிசனமுடைய – தத்துவார்த்த தலைமைத்துவமும் இதுவரை வெளிப்படவில்லை.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நிகழ்வை நடத்த முள்ளிவாய்க்காலில் இன அழிப்பு நினைவுத் தூபி அமைக்கிறோம் என வடக்கு மாகாண சபை ஒரு குழு அமைத்தது.

அந்தக் குழு எதுவும் செய்யாமல் மாகாண சபையோடு கலைந்துபோனது.

அன்றைய முதல்வராக இருந்த இன்றைய நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரனிடம் பலராலும் முன்வைக்கப்பட்ட கோரிக்கை நினைவுத் தூபி, நினைவு நிகழ்வை நடத்துவதற்கான பொதுக்கட்டமைப்பு ஆகியன. இதில் எதனையும் முன்னெடுக்கவில்லை. மாகாண அரசை கொண்டே இந்த விடயங்களை மிக இலகுவாக நகர்த்தி இருக்கலாம். விக்னேஸ்வரன் வலி புரியாதவர். ஆகவே மாகாண சபையும் இன அழிப்பு செயற்றிட்ட விடயத்தில் மாத்திரமன்றி, பொதுவாகவே பயனற்று போனதுடன், இந்த விடயங்களும் செயலின்றி நலிவடைந்து விட்டன.

திட்டமிட்ட இனப்படுகொலை நிகழ்வை வழிநடத்த, சகலரின் ஒத்துழைப்புடனும் குறைந்தபட்சம் வடக்குக் கிழக்கின் எட்டு மாவட்டங்களையும் உள்ளடக்கி, ஒரு பொதுக் கட்டமைப்பை அரசியலுக்கு அப்பால் உருவாக்குவதில் என்ன பிரச்சினை எழுந்து விடப் போகிறது? இவ்விடயத்தை, ஒரு சில மத குருக்கள் தங்கள் உள்ளங்கைப் பிடிக்குள் இறுகப் பற்றி வைத்துள்ளனர்.

ஒவ்வொரு ஆண்டும் ஒரு பிரகடனம் என்ற போர்வையில் ஓர் அறிக்கை வருகிறது.

13



# முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையும் முகவரியற்ற தமிழினமும்

(12ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அதை வாசிப்பதற்கு இன்னொரு மதகுரு. இவை கேலிக்கூத்தின் உச்சமாக அரங்கேறுகின்றன. எதற்காக இவர்கள் பொதுக் கட்டமைப்பை விரும்புகிறார்கள் இல்லை என்பதை வெளிப்படுத்தத் தயங்குகிறார்கள். இதற்கு ஆதரவாக சில யாழ் நகரமையவாதிகளும், ரிமோட் கண்ட்ரோலில் உள்ள உணர்ச்சிவச பல்கலைக்கழக மாணவர்களும், மேலும் சில புலம்பெயர் நலன் சார் அமைப்புக்களும், இந்த நிகழ்வை பொதுமைப் படுத்தவோ, மக்கள் மயப்படுத்தவோ, பரவலாக்கவோ, அடுத்த சந்ததியிடம் கையளிக்கும் நோக்கை விரிவுபடுத்தவோ முன் வருகிறார்கள் இல்லை.

அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பான செயல்பாட்டாளர் அருட்தந்தை சக்திவேல் அவர்கள் கடந்த காலத்தில் பல முயற்சி எடுத்து சில கூட்டங்களையும் நடத்தினார். யாழிலும் முல்லைதீவிலும் உள்ள சில அதி மேதாவிகள் அவரை அசிங்கப்படுத்தி விரட்டி விட்டனர். தற்போது ஏகன் அனேகன் என தங்களுக்கு தாங்களே தவில் வாசிக்கிறார்கள். இவர்கள் அரசியல்வாதிகளை விஞ்சி விடுவார்கள் போல் உள்ளது.

இனப்படுகொலை நினைவேந்தல் ஒரு மாவட்ட நிகழ்வாக சிலரின் எண்ணங்களுக்குள் சுருங்கிவிட வைப்பதும் இனப்படுகொலை செய்யப்பட்ட இனக்குழுமத்தின் மீதான இன்னொரு கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையாகும். அதை இவர்கள் புரிய மறுப்பது ஏன்? இனி, ஒவ்வொரு கட்சியினதும் சில குழுக்களினதும் ஆதிக்கமும் மேலெழும், யாவற்றையும் தடுக்க வேண்டும் என்றால் வலிமையான பொதுக் கட்டமைப்பு அவசியமாகும்.

பதினைந்து ஆண்டுகள் கடந்தும் இன்னும் இனப்படுகொலை நினைவு நிகழ்வுகளை ஒழுங்குபடுத்துவதற்கு ஒரு பொது கட்டமைப்பை உருவாக்க வல்லமை இல்லாத இனம், இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை கோருவதும் நம்புவதும் கேலிக்கூத்தானவை.

உலகம் எம்மை எப்படி நோக்கும் என்பதை கூட புரிந்து கொள்ள முடியாத முட்டாள் தமிழர்களாக நாம் இருக்கிறோம் என்பதே மிகப்பெரிய மனவேதனை.

தமிழர்களில் ஆழமான கருத்து புலமையுள்ள ஒரு புத்திசாலி கூட இல்லையா என அண்மையில் ஒரு சிங்கள அரசியல்வாதி விளித்திருந்தார். சமாதான நீதிவான்கள் நிலையில் யாழில் தடக்கி விழுந்தால் பேராசிரியரும் கலாநிதிகளும்தான். இவர்களால் தமிழினம் அடைந்த பயன் என்ன? எல்லாம் பெயருக்கு ஆசிரியராகியது தான் மிச்சம்.

ஆகவே ஒரு தூய விடுதலைப் போராட்டத்தின் நீட்சியை குறுகிய எல்லைக்குள் முடக்கி, சின்னாபின்னம் ஆக்குவதை இனியாவது தவிருங்கள். எல்லைகளை வியாபித்துக்கொள்ளுங்கள். அதை தொல்லைகள் என நினைக்காதீர்கள். திட்டமிட்ட இன அழிப்பை மதங்களுக்குள் சுருக்காதீர்கள். மதங்களால் ஒருபோதும் விடுதலையைப் பெற்றுத் தர முடியாது. மதமே புரட்சிக்கு எதிரான அடிப்படை வாதம் கொண்டது.

ஆகவே விடுதலை தீயை மதச்சாயம் ஊற்றி அணைக்க முனையாதீர்கள். பிரகாசிக்கட்டும் முள்ளிவாய்க்காலின் இன அழிப்பு சாட்சியம். உலகம் முழுக்க வியாபிக்க எல்லோரும் ஒத்துழையுங்கள். ஆக்கபூர்வமாக உழையுங்கள். விடுதலை தீயை அணையாமால் பிரகாசித்துப் பாதுகாப்போம். பேதங்களைக் கடந்து, அநீதிகளை எதிர்க்க, நீதியைப் பெற்றுக்கொள்ள அனைவரும் எழுந்து வாருங்கள் – ஒரு தேசமாக இணைவோம்.

# சிறி சபாரத்தினத்தின் நினைவேந்தல் இன்று

(எஸ்.நிதர்ஷன்)

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) முன்னாள் தலைவர் சிறி சபாரத்தினத்தின் 38ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

சிறி சபாரத்தினம் படுகொலை செய்யப்பட்ட கோண்டாவில் அன்னங்கை பகுதியில் ரெலோ அமைப்பின் ஏற்பாட்டில் இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து காலை 10 மணிக்கு ரெலோ அமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட தலைமை அலுவலகத்தில் சபாரத்தினம் அஞ்சலிக் கூட்டமும் நடைபெறும்.

இந்நினைவேந்தல் நிகழ்வில் ரெலோ தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கல நாதன் உட்பட கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர் எனக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் சபாகுகதாஸ் அறிவித்துள்ளார்.

# மட்டு. சத்துருக்கொண்டான் உப்பாறில் மண்டை ஓடும் சில எலும்புகளும் மீட்பு!




(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் கண்ணகி அம்மன் ஆலையதின் பின்பகுதியிலுள்ள உப்பாற்றில் இனம் தெரியாத ஆண் ஒருவரின் மண்டை ஓடு மற்றும் எலும்புகள் நேற்று சனிக்கிழமை பிற்பகல் மீட்கப்பட்டுள்ளன எனக் கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த ஆற்றில் நேற்றுப் பகல் மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர் ஒருவின் வலையில் மண்டை ஓடு மற்றும் இரு எலும்புக் கூடுகள் சிக்கியமையையடுத்து அதனைக் கரைக்கு கொண்டு வந்தனர்.

இது தொடர்பாக பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டதை யடுத்து சம்பவ இடத்துக்கு பொலிஸ் தடவியல் பிரிவினர் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டது. இது 40 வயதுக்கு உட்பட்ட ஆண் ஒருவரின் மண்டை ஓடு எனப் பகுப்பாய்வாளர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற மேலதிக நீதிவானும் மட்டக்களப்பு பதில் நீதுவானுமாகிய தர்சினி சம்பவ இடத்துக்கு சென்று மண்டை ஓட்டைப் பார்வையிட்டு பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டார். மீட்கப்பட்ட மண்டை ஓடு, எலும்புகள் மட்டு போதனா வைத்தியசாலை யில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை மீட்கப்பட்ட மண்டை ஒடு கடந்த பெப்பிரவரி மாதம் 17 ஆம் திகதி காணாமல் போயுள்ள மனநலம் குன்றிய 28 வயதுடைய இளைஞனான பழைய பனிச்சையடியைச் சேர்ந்த செல்வராசா நிதுஷன் என்பவரது மண்டை ஓடாக இருக்கலாம் என அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர். இதுவரை அது அடையாளம் காணப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்குவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நிகழ்நிலையில் சந்தேகநபர்களை முன்னிலைப்படுத்தும் நடவடிக்கை

நிகழ்நிலை ஊடாக சந்தேகநபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும் வகையில், நீதிமன்ற நடமாடும் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அங்குனுகொலபெலஸ்ஸ, காலி, களுத்துறை ஆகிய இடங்களில் இந்த நீதிமன்ற நடமாடும் சேவைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

சிறைச்சாலைகளில் 60 வீதமாக காணப்படும் அதிகாரி கள் பற்றாக்குறையால் ஏற்படும் சிக்கல்களுக்கு, இந்தத் திட்டத்தின் ஊடாகத் தீர்வு பெற்றுக்கொடுக்க முடியுமென நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள் ளார்.

சந்தேகநபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த அழைத்துச் செல்வதற்கான போக்குவரத்துச் செலவு பாரிய அளவில் காணப்படுவதோடு, அதற்காகப் பொதுமக்களின் பணமே பயன்படுத்தப்படுவதாக அமைச்சர் விஜேதாஸ சுட்டிக்காட்டியுள்ளார்.

தினமும் கைதிகளை நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்வதற்காக அதிகளவான அதிகாரிகள் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.பிணை தீர்மானிக்கப்படுவது மற்றும் விளக்கமறியல் நீடிக்கப்படுவது உள்ளிட்ட நடவடிக்கைகளுக்காகவும் கைதிகளை நீதிமன் றங்களுக்கு அழைத்துச் செல்லப்பட வேண்டியுள்ளனர் எனவும் விஜேதாஸ தெரிவித்துள்ளார்.

இந்தச் சிக்கல்களை தவிர்ப்பதற்கு ஒன்லைன் ஊடான நீதிமன்ற நடமாடும் சேவைத் திட்டம் பயனுள்ளதாக அமைவ தோடு, கைதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் இந்தத் திட்டம் சிறந்ததாக அமையுமென நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.

# சிறு குற்றங்களில் ஈடுபடுபவர்களை வீட்டுக் காவலில் வைக்க யோசனை

சிறு குற்றங்களில் ஈடுபடும் நபர்களை வீட்டுக் காவலில் வைக்கும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் கலாநிதி விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான சட்டமூலம் எதிர்காலத்தில் நாடாளுமன் றத்தில் சமர்ப்பிக்கப்படும் என அமைச்சர் விஜேதாஸ தெரிவித் துள்ளார்.

சிறு குற்றங்களுக்காக நீண்ட காலம் சிறையில் இருப்பவர்கள் மன ரீதியாக பாதிக்கப்படுகின்றமையுடன், அவர்கள் சமூகத்தில் பெரும் குற்றவாளிகளாகவே சித்தி ரிக்கப்படுகின்றனர்.

அவ்வாறான நிலைமையை மாற்றி, சிறு குற்றங்களுக்கா கக் கைது செய்யப்படுபவர்களை சிறையில் அடைக்காமல் வீட்டுக்காவலில் வைக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ள தாக அவர் தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்டவர்களை அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைத்து, ஆவணம் ஒன்றை தயாரித்து அதன் அடிப் படையில் இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்த உள்ளதா கவும் நீதி அமைச்சர் கலாநிதி விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.



# ஆடுகள், மாடுகள் இறைச்சிக்காக வெட்டும் சட்டவிரோதக் கொல்களம் யாழில் முற்றுகை

யாழ்ப்பாணம் ஒஸ்மானிய கல்லூரிக்கு அருகாமையில் பாழடைந்த கட்டிடம் ஒன்றில் சட்டவிரோதமாக மாடு மற்றும் ஆட்டு இறைச்சி வெட்டும் இடம் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டது.

இந்த இடத்தில் நீண்ட காலமாக ஆடு, மாடு வெட்டி வந்த நிலையில் பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் நிசாந்தவின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த புலனாய்வு தகவலுக்கமைவாக சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் நான்கு மாடுகள் தலை வெட்டப்பட்ட நிலையில் மாடுகளையும் உயிருடன் 21 மாடுகளையும், 4 ஆடுகளையும் கைப்பற்றியுள்ளனர்.

இதனையடுத்து சந்தேகநபராக ஒருவரை பொலிஸார் கைது செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. இதே வேளை நீண்டகாலமாக இந்த இடம் கொல்களமாகச் செயற்பட்டு வருவதாகவும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் நோக்கி பல இடங்களில் இருந்தும் மாடுகள் கொண்டு வரப்பட்டுள்ளன எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை இறைச்சி வெட்ட பயன்படுத்தும் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.









# நெடுந்தீவில் இருந்து கடத்தி வரப்பட்ட 10 மாடுகளுடன் லொறி யாழில் சிக்கியது




நெடுந்தீவில் இருந்து சட்டவிரோத மான முறையில் மாடுகளை கடத்தி வந்த லொறி ஒன்றை நேற்று முன் தினம் மாலை யாழ்ப்பாணம் பொலி ஸார் கைப்பற்றியமையோடு அந்த லொறியில் இருந்து 10 மாடுகளையும் மீட்டுள்ளனர்.

இது குறித்து மேலும் தெரியவருவ தாவது:–


நெடுந்தீவில் இருந்து 20 மாடுகள் முறையான ஒழுங்குப் பரிமாணங் களின்றி சட்டவிரோதமான முறை யில் யாழ்ப்பாணம் நோக்கி லொறி யில் கொண்டுவரப்படுகின்றன எனக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமை வாக யாழ் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் நிசாந்தவின் கீழ் இயங்கும் யாழ் மாவட்ட பொலிஸ் புல னாய்வு பிரிவினரால் லொறி கைப்பற் றப்பட்டது.

இதனையடுத்து வாகனத்தில் இருந்து 10 மாடுகள் மீட்கப்பட்டன.

சந்தேகத்தின் அடிப்படையில் 36 வயதான ஒருவர் கைது செய்யப்பட்ட நிலையில் ஆரம்பகட்ட விசாரணைக ளில் யாழ் பண்ணை பகுதியில் 10 மாடு கள் ஏற்கனவே விற்பனை செய்யப் பட்டுள்ளன எனவும், நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவான் வரை படகி லும், பின்னர் லொறிமூலம் மாடுகளை கொண்டு வந்துள்ளனர் எனவும் தகவல் வெளிவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# முறையாக இறக்குமதி செய்யப்படாத சொக்கலேற் வகைகளுக்குத் தண்டம்



மானிப்பாய் ஆனைக்கோட்டை பகுதியில் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பெருமளவான சொக்கலேற் வகைகள், இனிப்பு வகைகள் கைப்பற்றப்பட்டு ரூபா ஒரு லட்சம் தண்டம் அறவிடப்பட்டது.

ஆனைக்கோட்டைப் பொதுச் சுகா தாரப் பரிசோதகர் கு.பாலேந்திரகுமார் மற்றும் கி.அஜந்தன் தலைமையில் இடந்த மாதம் பல foodcity களில் இடம்பெற்ற திடீர் சுற்றி வளைப்புகளில் முறையான விதத்தில் இறக்குமதி செய்யப்படாத மற்றும் நிறக்குறியீடுகள், சுட்டு துண்டுகள் இல்லாத வெளிநாட்டு ferro rocher, bitter crocen, cool world mint, turzarina, Big go,Browine, Toblerone, Gold wings போன்ற சொக்கலேற் வகை களும் குளோப்ஜாமுன், சோன்பப் படி, waterwall போன்ற இனிப் புவகளும் கைப்பற்றப்பட்டு இறக்கு மதியாளர்களிற்கும் விநியோகஸ்தர் களிற்கும் 02.05.2024 அன்று வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அன்றைய தினம் வழக்கினை விசாரித்த நீதவின் கடும் எச்சரிக்கை வழங்கி ரூபா ஒரு லட்சம் தண்டமும் விதித்தார்.

# பசுக்கள் கடத்தி வெட்டப்படுவதை கண்டிக்கின்றது சைவ மகா சபை!

பசுக்கள் கடத்தப்பட்டு கொடூரமாக அடைத்து வைக்கப்படட, மறைவிடங்களில் சட்டவிரோத இறைச்சி விற்பனைக் குழுக்க ளால் கொல்லப்படுவதை சைவ மகா சபை வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக மகா சபை தெரிவித்திருப்பதாவது:-

பசுக்களை தெய்வமாக வணங்கும் யாழ்ப்பாணத்தில் மிகக் கொடூரமாகத் துன்புறுத்தபபட்டு சட்டவிரோதமான இடங்களில் இறைச்சியாக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் அவலம் மனதை வருத்துகின்றது .

04.05.2024 சனிக்கிழமை மட்டும் யாழ் நகரில் 20 மேற்பட்ட பசுக்கள், காளைகள் குடாநாட்டின் பல பாகங்களி லிருந்தும் கடத்தி கொடூரமான நிலையில், உரிய பராமரிப் புக்கள் இன்றி இரத்தம் தோய்ந்த சட்டவிரோத கொல்களப் பகுதியிலிருந்து மீடகப்பட்டுள்ளன.

குறிப்பாக அண்மைக்காலமாக ஏழைப் பண்ணையா ளர்களுடைய பசுக்கள் களவாக கடத்தப்படுவது அதிகரித்து வந்த நிலையில் வாயில்லா ஜீவன்கள் இரத்த வாடை சூழ்ந்த இடத்தில், பட்டினியோடு, தாகத்தோடு அடைத்து வைத்திருந்த நிலையிலும் அவற்றின் ஒரு தொகுதி வெட்டபபட்ட நிலை யிலும் மீடகப்பட்டுள்ள செய்தி மிகுந்த துயரத்தை ஏற்படுத் துகின்றது.

சீவகாருண்ய நடைமுறைகளை கிஞ்சித்தும் கடைப்பிடிக் காமல் இந்த உயிர்களைத் தொடர்ச்சியாக துன்புறுத்தும் செயற்பாடு இம்மண்ணில் இருந்து ஒழிக்கப்பட வேண்டும்.

ஏழைப்பண்ணையாளர்களினதும் பசுக்களினதும் கண்ணீர் கதைகள் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட வேண்டும். அனைத் துத் துறை சார்ந்த அதிகாரிகளும் இதில் மிகுந்த கரிசனை எடுத்து இதற்கு காரணமான சட்டவிரோத வலைப்பின்னலை முழுமையாக சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டனை பெற்று கொடுக்க வேண்டும். பசுக்கள் வெட்டப்படுவதை முற்று முழுதா கத் தடுக்கவும் சட்டவிரோத கொல்களங்களை முழுமையாக கண்டறிந்து நடவடிக்கை எடுக்கவும், சைவ மகா சபை ஆழமாக சம்பந்தப்பட்ட அனைவரிடமும் வலியுறுத்தி நிற்கின்றது. - என்று தெரிவித்துள்ளது.





# ஜப்பானின் யென் கடன் திட்டத்தின் ஊடாக இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும்

## வெளிவிவகார அமைச்சர் யோகோ கமிகாவா தெரிவிப்பு

இரண்டு நாள்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வந்துள்ள ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் யோகோ கமிகாவா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று பிற்பகல் சந்தித்துள்ளார்.

இதன்போது, கடன் மறுசீரமைப்பிற்கான உடன்படிக்கை ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட பின்னர் இலங்கையின் அபிவிருத் திக்காக யென் கடன் திட்டத்தின் ஊடாக ஒத்துழைப்பு வழங்கு வோம் என ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் தெரி வித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத் தின் கீழ் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு, பொருளாதார மேம்பாட்டிற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதனை ஜப்பான் வரவேற்றுள்ளது.

கடன் மறுசீரமைப்பு தொடர்பிலான உடன்படிக்கை எட்டப் பட்டதன் பின்னர் இலங்கையினால் இரு தரப்பு உடன்படிக் கைகளுக்குச் செல்ல முடியும் என ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் தேசிய நல்லிணக்க செயற்பாடுகளுக்கு ஜப்பான் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கும் எனவும் அவர் உறுதியளித்தார்.



இலங்கையும் ஜப்பானும் தீவுகள் எனவும் சுதந்திர மற்றும் திறந்த இந்து சமுத்திர வலயத்தினை உருவாக்குவதற்கு ஜப்பான் இலங்கையுடன் இணைந்து பக்கபலமாக செயற்படும் என்றும் ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் யோகோ கமிகாவா தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலை யத்தை விரிவுபடுத்தல், இலகு ரயில் திட்டம் உட்பட ஜப்பான் அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்தப்பட்டு, தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களை விரைவாக மீள ஆரம்பிப்பதே ஜப்பான் அரசாங்கத்தின் நோக்கமாகும் எனவும் ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.





# தமிழ்ப் பொது வேட்பாளர்: மக்களை பலவீனப்படுத்தும் கருவி!



ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளராக போட்டியிடுவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை விரிவுரையாளர் ஒருவரின் பெயரை வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உள்மட்ட உரையாடல்களில் முன்மொழிந்திருக்கிறார். குறிப்பாக, யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் சிலரிடம், விரிவுரையாளரின் பெயரை அவர் வெளிப்படுத்தியிருக்கிறார். ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவர் தமிழ்த் தேசியக் கட்சிகளினால் ஒன்றிணைந்து நிறுத்தப்பட வேண்டும் என்ற விடயத்தை ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி கடந்த ஆண்டு முதன் முதலாக முன்வைத்தது. அந்தத் தருணத்தில், பொது வேட்பாளராக போட்டியிடுவதற்கு தான் தகுதி வாய்ந்த நபர் என்று விக்னேஸ்வரன் அறிவித்திருந்தார். ஆனால், அதனை யாரும் கண்டுகொள்ளவில்லை. அத்தோடு, தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில் ஆராய்வதற்காக சில வாரங்களுக்கு முன்னர் அவர் அழைப்பு விடுத்த கூட்டமும் அரசியல் கட்சிகளினால் புறக்கணிக்கப்பட்டது. அதனையடுத்து, வேலன் சாமி என்கிற ஒருவரை பொது வேட்பாளராக முன்னிறுத்தலாம் என்ற யோசனையை விக்னேஸ்வரன் வெளிப்படுத்தினார். அதுவும் யாரினாலும் கணக்கில் எடுக்கப்படவில்லை. இந்த நிராகரிப்புக்களுக்குப் பின்னர் தான்,அவர் இப்போது யாழ்ப்பாணப் பல்கலைக் சட்ட விரிவுரையாளரின் பெயரை முன்மொழிந்திருக்கிறார்.



**புருஜோத்தமன் தங்கமயில்**

தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயத்தை தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் மூன்று முக்கிய தரப்புக்கள் தூக்கிச் சுமக்கின்றன. அதில், முதலாவது தரப்பினர், ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதித் தேர்தலில் வெல்ல வைக்கும் நோக்கில் இயங்குபவர்கள். இரண்டாவது தரப்பினர் – 13ஆவது திருத்தச் சட்டத்தினை தமிழ் மக்களின் அரசியல் தீர்வாக தலையில் ஏற்றத் துடிக்கும் குழுவினர். மூன்றாவது தரப்பினர் – தமிழரசுக் கட்சியின் உள்ளகப் பிரச்சினையின் விளைவாக 'நீயா நானா' என்ற தன்முனைப்பு (Ego) போட்டிக்காக தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தை கையில் எடுத்திருக்கும் சிலர். இந்த மூன்று தரப்பினரும் கூட்டாக நின்று தமிழ் மக்களின் ஒன்றிணைந்த குரலை சர்வதேசத்துக்கு அறிவிப்பதற்கான வாய்ப்பாக ஜனாதிபதித் தேர்தலை பார்க்க வேண்டும் என்கிறார்கள். அதற்காக, தமிழ்ப் பொது வேட்பாளர் என்பது முக்கிய அரசியல் கருவி என்று விளக்கமளிக்கிறார்கள்.

தமிழ்த் தேசிய அரசியல் போராட்டம் ஆரம்பித்த காலம் தொட்டு தேர்தல்களில் பங்கெடுத்தும், புறக்கணித்தும், அஹிம்சை மற்றும் ஆயுதப் போராட்ட வடிவங்களிலும் தமிழ் மக்கள் தங்களின் அரசியல் நிலைப்பாட்டினை ஒன்றிணைந்து சர்வதேசத்துக்கு அறிவித்திருக்கிறார்கள். அப்போதெல்லாம் உணர்த்தப்படாத என்ன மாதிரியான இராஜதந்திர ஒழுங்குள்ள குரலை, தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தி இப்போது அறிவிக்கப்போகிறார்கள் என்பது தெரியவில்லை. அதுபோக, முள்ளிவாய்க்கால் முடிவுகள் வரையில் கண்ணும் வாயும் மூடி மௌனியாக இருந்த சர்வதேசம், ஒரு இலட்சம் வாக்குகளைக் கூட பெறுவதற்கான வாய்ப்பில்லாத தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தை கண்டுகொள்ளும் என்பது என்ன வகையிலான இராஜதந்திர முன்னெடுப்பு. ஜனாதிபதித் தேர்தல் நிறைவுற்று பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டதும் பொது வேட்பாளர் முன்னெடுப்புக்களில் ஈடுபட்ட தரப்பினர் காணாமல் போய் விடுவார்கள். பொது வேட்பாளராக போட்டியிட்டவர், குமார் பொன்னம்பலம், எம்.கே.சிவாஜிலிங்கம் வரிசையில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட தமிழர் என்ற பெயரைப் பெறுவதோடு விடயம் அரங்கில் இருந்து அகன்றுவிடும். இதனைத்

தொடர்ச்சி ▼

# தமிழ்ப் பொது வேட்பாளர்: மக்களை பலவீனப்படுத்தும் கருவி!

தொடர்ச்சி ▲

தாண்டி அரசியல் இராஜதந்திர வெற்றிகளைப் பெறுவதற்கான எந்த வாய்ப்பும் பொது வேட்பாளர் விடயத்தில் இல்லை.

தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தை ரணிலின் வெற்றிக்காகவும், இந்திய வல்லரசின் பிராந்திய நலன்களுக்காகவும் தூக்கிச் சுமப்பவர்கள் இலகுவில் கைவிடுவார்கள் என்று சொல்ல முடியாது. 13ஆவது திருத்தச் சட்டம் என்பது, தமிழ் மக்களிடம் இறக்கி வைக்கப்பட்ட அரைகுறை ஆவணம். அதனைத் தொடர்ந்தும் பாதுகாப்பது என்பது இந்தியாவின் கௌரவப் பிரச்சினையாகும். ஆனால், எப்படியாவது இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை முறித்து, 13ஆவது திருத்தத்தை செல்லாக் காசாக்கிவிட வேண்டும் என்பது தென் இலங்கையின் ஒற்றை நிலைப்பாடு. அப்படியான நிலையில், 13ஆவது திருத்தத்தின் பெயரைச் சொல்லி



தமிழ் அரசியல் பரப்பினைக் கொண்டு இலங்கையுடனான ஒப்பந்தத்தை காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்பது இந்தியாவின் தொடர் முயற்சியாகும். இப்போது, தமிழ்ப் பொது வேட்பாளராக விக்னேஸ்வரன் முன்மொழிந்திருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர்,13ஆவது திருத்தத்தின் வெளிப்படையான ஆதரவாளர். அவர், பொது அரங்குகளில், தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு 13ஆவது திருத்தம் தீர்வாக கொள்ளப்பட வேண்டியது என்று கூறி வருபவர்.

யாழ்ப்பாணத்தில் கடந்த ஆண்டு திடீரென சிவில் அமைப்பு என்ற பெயரில் வர்த்தகர் ஒருவர் வழிநடத்தலில் குழுவொன்று தோன்றியது. அந்த அமைப்பில் இருக்கும் அரசியல் ஆய்வாளர்கள் என்று தங்களை முன்னிறுத்துபவர்கள், கடந்த காலங்களில் பல்வேறு சிவில் அமைப்புக்களில் முக்கியஸ்தர்களாக இருந்திருக்கிறார்கள். அதிலும், 13ஆவது திருத்தச் சட்டத்தை தமிழ் மக்களின் தீர்வாக ஏற்க வேண்டும் என்ற கருத்துருவாக்கத்தைச் முன்னிறுத்திச் செயற்பட்டவர்கள். தமிழ்ப் பொது வேட்பாளர் விடயம் பற்றி இந்தச் சிவில் அமைப்பு பேசிய தருணங்களில் எல்லாம், 13ஆவது திருத்தம் தமிழ் மக்களினால் ஏற்கப்பட வேண்டும் என்ற விடயமும் சேர்த்தே பேசப்படுகின்றது.

வவுனியாவில் கடந்த வாரம், சிவில் அமைப்புக்கள், அரசியல் ஆய்வாளர்கள், செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட குழுவினர் கூடி தமிழ்ப் பொது வேட்பாளர் விடயம் பற்றி ஆராய்ந்திருக்கிறார்கள். இதன்போது, எப்படியாவது தமிழ் வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் முன்னிறுத்திவிட வேண்டும் என்ற நோக்கில், சில விடயங்களை முன்னிறுத்தி ஊடக அறிவிப்பையும் விடுத்திருக்கிறார்கள். இந்தக் கூட்டம் முடிந்து ஒரு சில நாள்களிலேயே, கிளிநொச்சியில் நடைபெற்ற மே தின நிகழ்வில் கலந்து கொண்டிருந்த மனோ கணேசன், தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தை வடக்கு கிழக்கிற்குள் சுருக்கிக் கொள்ளுங்கள், அதனை தெற்கு (தமிழ் மக்களை) நோக்கி எடுத்து வர வேண்டாம் என்று கூறியிருக்கிறார். அத்தோடு, விக்னேஸ்வரன், அதே கூட்டத்தில் கலந்து கொண்டு தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தில் முன்வைத்த கருத்துக்களையும் கேள்விக்கு உள்ளாக்கியிருந்தார். அதாவது, கூட்டத்தில் பேசிய விக்னேஸ்வரன், தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தி அவருக்கு தமிழ் மக்கள் முதல் வாக்கினை அளிக்க வேண்டும். இரண்டாவது வாக்கினை தென் இலங்கையின் வேட்பாளருக்கு அளிக்க வேண்டும் என்றிருக்கிறார். இந்தக் கருத்தினையே மனோ கணேசன் கேள்விக்குட்படுத்தினார். இரண்டாவது வாக்கினை சிங்கள வேட்பாளருக்கு அளிக்கலாம் என்பதே, தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயத்தை மலினப்படுத்தி விடுகின்றது இல்லையா என்பது, அவரின் கேள்வி.

ரணிலின் வெற்றி மீது விக்னேஸ்வரனுக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. நாடாளுமன்றத்துக்குள் இடம்பெற்ற ஜனாதிபதித் தெரிவு வாக்களிப்பின் போதே, ரணிலுக்கு அவர் வெளிப்படையாக வாக்களித்தவர். தென் இலங்கையினால் முன்னிறுத்தப்படும் ரணில், சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திசாநாயக்க என்ற வேட்பாளர்களில், ரணிலே ஜனாதிபதி பதவிக்கு பொருத்தமானவர் என்பதும் விக்னேஸ்வரனின் நிலைப்பாடு. அப்படியான நிலையில், ரணிலின் வெற்றிக்காக அவர் பாடுபடுவார் என்பது இயல்பான ஒன்று. ஆனால், அதற்காக அவர், தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயத்தை கருவியாக்கியிருக்கிறார். இன்றிருக்கும் நிலையில், தமிழ் மக்கள் ரணிலுக்கு வாக்களிப்பதற்கு வாய்ப்புக்கள் மிகவும் குறைவு. ஏனெனில், அவர் ராஜபக்ஷக்களின் முகமாகவே இருக்கிறார். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் போட்டியிடுவதாக இருந்தால், அது ராஜபக்ஷக்களின் அனுசரணையோடு நிகழ்ந்தாக வேண்டும். அப்படியான நிலையில், தமிழ் மக்கள் ரணிலுக்கு வாக்களிக்க மாட்டார்கள். அப்போது தமிழ் மக்களின் பெரும்பான்மைத் தெரிவு சஜித்தாகவே இருக்கும். இதனால்தான், சஜித்துக்கு தமிழ் மக்கள் அளிக்கும் வாக்குகளை மடைமாற்றும் முகமாக தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தை தமிழ் மக்களிடம் இறக்கி வைக்க முயற்சிக்கிறார்கள். ஆனால், தமிழ் மக்களின் அரசியல் புரிதல் தெளிவானது. அவர்கள், பொது வேட்பாளர் விடயத்தை ஒரு பொருட்டாகவே இதுவரையில் கருதவில்லை. இனியும் கருது

தொடர்ச்சி ▼

# தமிழ்ப் பொது வேட்பாளர்:
# மக்களை பலவீனப்படுத்தும் கருவி!

தொடர்ச்சி ▲

வதற்கு வாய்ப்பும் இல்லை.

தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களைப் புரிந்து கொள்ளாமல், தங்களின் குறுகிய அரசியல் நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கும் தரப்புக்கள், தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தை முன்வைத்தால் அது நிச்சயமாக தோற்றுப் போகும். அப்படியான நிலையில், தமிழ் மக்கள் தமிழ்ப் பொது வேட்பாளரை நிராகரித்தார்கள் என்ற அவசியமற்ற அவப்பெயரொன்று வரலாறாகிவிடும். ரணிலை வெற்றிபெற வைப்பதற்காகவோ, இந்தியாவின் நலனைக் காப்பதற்காகவோ, ஏற்கனவே பலவீனமடைந்திருக்கிற தமிழ் மக்களை பகடைக்காய்களாக மாற்றுவது அறமற்றது.

“...அரசியல் பொருளாதார ரீதியில் பலவீனமடைந்திருக்கிற தமிழ் மக்கள், ஜனாதிபதித் தேர்தலை பரீட்சார்த்த முயற்சியாக பார்க்க முடியாது. தமிழ்ப் பொது வேட்பாளர் விடயம் என்பது காலத்துக்கு பொருத்தமற்றது..” என்று ஊடகவியலாளர் ஜெரா தம்பி, தன்னுடைய காணொலிப் பதிவொன்றில் குறிப்பிட்டிருந்தார். விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் சனக்கூட்டம், தன்னுடைய பலத்தைப் இழந்து நிற்கின்ற எந்தவொரு தருணத்திலும், தேவையற்ற பரீட்சார்த்த முயற்சிகளை முன்னெடுக்காது. மாறாக தன்னுடைய பலத்தினை சமூக – பொருளாதார – கல்வி மட்டத்தில் பெருக்கிக் கொள்ளவே முயலும். பலவீனமடைந்திருக்கிற சனக்கூட்டம் தன்னுடைய நிலையை உணராமல், தேவையற்ற பரீட்சார்த்த முயற்சிகளை முன்னெடுப்பது என்பது, மீள முடியாத வீழ்ச்சிகளை சந்திக்கும் சூழலை உருவாக்கும். அத்தோடு, சனக்கூட்டத்துக்குள் தேவையற்ற பிளவுகளை ஏற்படுத்தும். பலவீனமடைந்திருக்கின்ற சனக்கூட்டத்தின் எழுச்சி என்பது, பிளவின்றி ஒருங்கிணைவதன் மூலமே நிகழ முடியும். முள்ளிவாய்க்கால் முடிவுகளைச் சந்தித்து மீண்டு வர முயற்சிக்கும் சனக்கூட்டத்திடம், தமிழ்ப் பொது வேட்பாளர் விடயம் என்பது தேவையற்ற பிளவுகளை ஏற்படுத்தும். சிலவேளை, தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற பெயரில் ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் களம் கண்டால், கடந்த காலங்களில் சிவாஜிலிங்கம் பெற்ற வாக்குகளைக் காட்டிலும் அதிகமாக பெறலாம். ஆனால், அது தமிழ் மக்களின் வாக்குப் பிளவை கனதியாக்கும். அது, அடுத்த பொதுத் தேர்தலிலும் பிரதிபலிக்கும் சூழலைத் தோற்றுவிக்கும்.

வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலை தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள், தங்களின் தன்முனைப்பு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான விடயமாக கையாளக் கூடாது. அப்படிக் கையாளுதல் என்பது, கட்சியை தமிழ் மக்களிடத்தில் இருந்து இன்னும் இன்னும் அந்நியப்படுத்தும். ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் ராஜபக்ஷக்களின் ரணிலுக்கு எதிராகவே வாக்களிப்பார்கள். அப்படியான கட்டத்தில் அந்த முடிவின் பக்கத்தில் நிற்பதுதான் சரியானது. மாறாக, மக்களின் நிலைப்பாடுகளுக்கு அப்பால் நின்று, தனிப்பட்ட கோப தாபங்களைத் தீர்க்கும் விடயமாக ஜனாதிபதித் தேர்தலை கையில் எடுத்தல் என்பது நல்லதல்ல. தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்திற்கான ஆதரவுத் தரப்பாக தமிழரசுக் கட்சிக்குள் சிவஞானம் சிறீதரன் உள்ளிட்ட சிலர் கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்கள். ஆனால், அவர்கள் தமிழ்ப் பொது வேட்பாளர் விடயம் தொடர்பில் ஆராயும் கூட்டங்களில் இதுவரை பங்கெடுத்தது இல்லை. கிளிநொச்சி மே தினக் கூட்டத்தில் மனோ கணேசனின் தமிழ் வேட்பாளர் தொடர்பிலான பதில், விக்னேஸ்வரனுக்கு மட்டுமானதல்ல, சிறீதரனுக்குமானதுதான்.

ரணிலுக்காக வடக்கு – கிழக்கில் இம்முறை வெளிப்படையாக ஈ.பி.டி.பி., தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி உள்ளிட்டவை வாக்குகளைக் கேட்கும். அந்தக் கட்சிகளோடு தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தைத் தூக்கிச் சுமக்கும் தரப்பினரும் இணைந்து கொள்ளக் கூடாது. ஏனெனில், இரு தரப்பினதும் நோக்கம் ரணிலின் வெற்றியை நோக்கியதுதான். தமிழ் மக்கள் தேர்தல் அரசியலில் சற்று சலிப்படைந்திருக்கின்ற தருணம் இது. அத்தோடு, நாட்டை விட்டு கணிசமான அளவில் வெளியேறி வருகிறார்கள். அப்படியான நிலையில், தமிழ்ப் பொது வேட்பாளர் விடயமும் தமிழ் மக்களை ஜனாதிபதித் தேர்தலில் இருந்து தூர விலக்கி வைத்துவிடலாம். அந்தச் சூழல், அடுத்த பொதுத் தேர்தலிலும் பிரதிபலித்தால் தென் இலங்கைக் கட்சிகளும், அவர்களின் உதிரிகளும் வடக்கு கிழக்கில் வாக்கு வேட்டையை நடத்தும். அதனால் பாதிக்கப்படப்போவது என்னவோ, தமிழ்த் தேசியக் கட்சிகள்தான். எதிரியின் பலம் பலவீனத்தை மாத்திரமல்ல, களத்தினையும் சூழலையும் புரிந்து கொண்டு ஆடப்பட வேண்டியது அரசியல் – இராஜதந்திர ஆட்டம். அதில், விளையாட்டுத்தனம் ஆபத்தானது.



### பத்துக் கோடி ரூபா பெறுமதியான

# 11 லட்சத்திற்கும் அதிகமான போதை மாத்திரைகள் இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த சமயம் சிக்கின

## தமிழகம் பெரியப்பட்டிணம் கடற்கரைப் பகுதியில்




(ந.லோகதயாளன்)

இலங்கைக்குக் கடத்த முற்பட்ட 11 லட்சத்திற்கும் அதிகமான போதை மாத்திரைகளை தமிழகப் பொலிஸார் நேற்று அதிகாலை கைப்பற்றியுள்ளனர். இதன் இந்தியப் பெறுமதி 2.37 கோடி ரூபா (இலங்கைப் பணத்தில் பத்துக் கோடி ரூபாவுக்கும் அதிகம்) பெறுமதி எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழகம் பெரியப்பட்டிணம் கடற்கரை பகுதியில் கடத்தல் இடம்பெறுவதாக கிடைத்த தகவலில் அங்கு பொலிஸார் விரைந்து சென்ற போது அங்கே சந்தேகத்திற்கிடமாக நின்று கொண்டு இருந்த ஓர் வாகனத்தை சோதனை செய்ய முயன்ற சமயம் அந்த வாகனம் தப்பி சென்றுள்ளது. தப்பிச் சென்ற வாகனத்தைத் துரத்திச் சென்ற பொலிஸார் வாகனத்தை மடக்கிப் பிடித்தனர்.

அந்த வாகனத்தைச் சோதனை செய்த சமயம் 11 லட்சத்து 88 ஆயிரம் பிறிகப் எனப்படும் மாத்திரைகள் இலங்கைக்கு கடத்துவதற்காக வாகனத்தில் எடுத்து வந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

கடத்தல் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளபோதும் உதவிக்குப் பயணித்தவர் தப்பிச் சென்றுள்ளார்.



# இந்தியாவின் மக்களவைத் தேர்தல் பணிகளை மேற்பார்வை செய்ய இலங்கைக்கு அழைப்பு

இந்திய மக்களவைத் தேர்தல் பணிகளை மேற்பார்வை செய்வதற்காக இலங்கைக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்திய தேர்தல் ஆணையகத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் சர்வதேச தேர்தல் பார்வையாளர் நிகழ்ச்சியின் ஓர் அங்கமாக இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் மிகப்பெரிய தேர்தலொன்று நடைபெறுவதைக் காண்பதற்காக 23 நாடுகளில் உள்ள தேர்தல் முகாமைத்துவ அமைப்புகளுடன் தொடர்புடைய 75 சர்வதேச பார்வையாளர்களுக்கு இந்திய தேர்தல் ஆணையகம் அழைப்பு விடுத்துள்ளது.

மே மாதம் 4 ஆம் திகதி முதல் மே 9 ஆம் திகதி வரை நடைபெறுகின்ற சர்வதேச தேர்தல் பார்வையாளர் நிகழ்ச்சியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி 10 உறுப்பினர்களைக் கொண்ட தூதுக்குழு பங்கேற்கின்றது.

இந்த தூதுக்குழுவில் இலங்கை தேர்தல் ஆணைக்குழுவின் இரண்டு பிரதிநிதிகள் மற்றும் தேர்தல் சட்ட சீர்திருத்தங்களுக்கான பரிந்துரைகளை உருவாக்குவதற்கான குழுவின் 8 பிரதிநிதிகள் உள்ளடங்குகின்றனர்.

இலங்கை தூதுக்குழுவின் பங்கேற்பு, இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கும், இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான தேர்தல் நடைமுறைகள் தொடர்பிலான அறிவு மற்றும் அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்குமான முக்கிய தளமாக அமையுமெனவும் இலங்கைக்கான இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 05.05.2024




இன்று உங்களுக்கு சாதகமான நாளாக இருக்காது. இன்று உங்களிடம் எதையோ இழந்தது போன்ற உணர்வு இருக்கும் என்பதால் பொறுமை அவசியம் மேற் கொள்ள வேண்டும்.

நீங்கள் பணி செய்யும் விதத்தை திட்டமிட வேண்டும். கவனமாக திட்டமிட்டு பணியாற்ற வேண்டியது இன்று அவசியம்.

மகிழ்ச்சி யின்மை காரணமாக உங்கள் துணையிடம் குறைந்த புரிந்துணர்வு காணப்படும். உங்கள் மன நிலையை மாற்றிக் கொண்டு நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்.

நீங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். பண இழப்பை சந்திக்க நேரலாம். இது உங்களுக்கு கவலை ஏற்படுத்தும். நிதி வளர்ச்சி குறைந்து காணப் படும்.




இன்று உங்களுக்கு வாய்ப்புகள் கிடைக்கும் நாள். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பது நல்லது. நீங்கள் நல்ல நேரத்தை கொண்டாடி மகிழலாம்.

இன்று உங்கள் பணிகளை கவனமாக மேற்கொள்ள வேண்டிய சூழல் காணப்படும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு மற்றும் பாராட்டு பெறுவீர்கள். பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சியும் நல்லிணக்கமும் காணப்படும்.

நிதி நிலைமையில் முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு உயரும். நிதி நிலையில் சுதந் திரம் காணப்படும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்கள் கடின உழைப் பிற்கான பலன்களைக் காண்பீர்கள். இன்று முன்னேற்றங்கள் கிடைக்கும். மொத்ததில் நல்ல பலன் கிடைக்கும் நாள்.

இன்று நீங்கள் சிறப்பாக பணி புரி வீர்கள். பணியிடத்தில் முன்னேற்றம் காணப்படும். புதிய வேலை வாய்ப்புகள் ஏற்படலாம்.

உங்கள் துணையுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்வீர்கள். உங்களின் அனுசரணையான போக் கின் மூலம் இது சாத்தியம்.

நிதி நிலையில் சிறப்பான முன்னேற்றம் காணப்படும். கணிசமான தொகை சம்பாதிப்பீர்கள். மகிழ்ச்சி காணப்படும்.

ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை இன்று சிறப்பாக இருக்கும்.




வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் அமைதி காண்பீர்கள். உங்கள் செயல் களில் உணர்வுப்பூர்வமாக செயல்படுவதை விட யதார்த்தமாக செயல்படுவது நல்லது. எல்லாவற்றிலும் அமைதியான அணுகுமுறை தேவை.

உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இய லாது. பணிகளில் தவறுகள் நேராதபடி இன்று நீங்கள் சிறப்பாக பணியாற்ற வேண்டும். உங்கள் பணிகளை முறைப்படுத்தி செய்யகற்க வேண்டும்.

உங்கள் துணையிடம் கடுமையாக நடந்து கொள் வீர்கள். நட்பாக நடந்து கொண்டு நல்லுறவை வளர்த் துக் கொள்வது நல்லது.

இன்று அதிக செலவுகள் காணப்படும். தேவையற்ற செலவுகள் செய்ய நேரும். எனவே செலவுகளை கட்டுப் படுத்த வேண்டும்.




ஏழைகள் மற்றும் உடல் ஊன முற்றோருக்கு பண உதவி செய்ய இந்த நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். இதனால் மகிழ்ச்சியாக இருப்பது போல உணர்வீர்கள். முக் கிய முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். நீங்கள் பணி களை திட்டமிட்டு மேற்கொண்டால் நல்ல பலன் கிடைக் கும். சக பணியாளர்களால் சில தொல்லைகளை சந்– திக்க நேரலாம்.

உங்கள் துணையுடன் பேசுவதை தவிர்க்கவும். இதனால் சில விரும்பத்தகாத சூழ்நிலையை தவிர்க்க லாம். நம்பிக்கையுடன் இருக்க வேண்டும்.

செலவுகள் அதிகமாக காணப்படும். அதிக பொறுப்பு கள் காரணமாக செலவுகள் அதிகமாக இருக்கும்.




உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். உங்கள் மனதில் சமநிலை உணர்வு காணப்படும். முக்கிய முடிவுகள் இன்று நல்ல பலன் தரும். உங்கள் தன்னம்பிக்கை நிலை அதிகரிக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள். புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். பணியிடத்தில் உற்சாகமான நிகழ்சிகள் நடக்கும்.

உங்கள் துணையுடன் நட்பாக நடந்து கொள்வீர்கள். இந்தப் போக்கின் காரணமாக இருவரிடையே வலுவான பிணைப்பு ஏற்படும்.

5நீங்கள் அதிக பணம் சம்பாதிப்பீர்கள். இந்த வளர்ச்சி உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

உங்களிடம் அதிக உறுதி காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.




இன்று நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். இன்றைய நாளை நீங்கள் பயனுள்ள வகையில் பயன் படுத்திக் கொள்ளலாம். இன்று பல சௌகரியங்களை நீங்கள் உணரலாம்.

நீங்கள் செய்யும் பணியில் வெற்றி காண்பீர்கள். உங்கள் தனித்திறமையை வெளிப் படுத்தி அதற்குரிய அங்கீகாரம் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்ல தொடர்பு கொண்டிருப் பீர்கள். இதனால் அவரிடம் மகிழ்ச்சி காணப்படும். நீங் களும் உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்கள் தேவைகளை சிறிய கடன் மூலம் பூர்த்தி செய்து கொள்வீர்கள். உங்கள் சேமிப்பு உயர்வதைக் காண்பீர்கள்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஸ்திரமான ஆரோக்கியம் காணப்படும்.




இன்று மிதமான பலன்களே கிடைக் கும். இன்று நற்பலன்கள்காண நீங்கள் யதார்த்தமான அணுகுமுறை மேற் கொள்ள வேண்டும். சுய முயற்சி நல்ல பலன் தரும்.

உங்கள் பணியில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். பணிகளை கவமாகக் கையாள நீங்கள் பணி சார்ந்த முறையில் திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையுடன் திருப்தி குறைந்து காணப்படும். உங்கள் இருவரிடையே தவகல் தொடர்பில் பிரச்சினை காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

நீங்கள் விரும்பும் பணம் உங்களுக்கு கிடைக்காது. இறுதியில் கடன் வாங்குவீர்கள். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

பதட்டம் காரணமாக கால் வலி காணப்படும். அமை தியாக இருப்பது நல்லது.

# இன்றைய ராசி பலன்கள் - 05.05.2024




இன்று முக்கிய முடிவுகள் எதுவும் எடுக்க வேண்டாம். உங்கள் செயல்களில் சிறிது கவனம் தேவை. இன்று நீங்கள் உணர்ச்சி வசப்படலாம். அதனை தவிர்ப்பது நல்லது.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது ஏமாற்றங்களையும் தடைகளையும் சந்திப்பீர்கள். சக பணியாளர்களுடனான தொடர்பு பயனுள்ளதாக இருக்காது. நீங்கள் பணிகளை முன்னுரிமைப் படுத்தி தக்க நேரத்தில் முடிக்க கற்றுக் கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் அமைதியற்ற உணர்வு காண்பீர்கள். எனவே எதையும் எளிதாக எடுத்துக் கொண்டு நட்பாக நடந்து கொள்ள வேண்டும்.

பணம் பற்றிய கவலை காணப்படும்.




இன்றைய நாள் சீராகச் செல்லும். மகிழ்ச்சியும் திருப்தியும் காணப்படும். இன்று நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். இதனை உங்கள் முன்னேற்றத்திற்கு நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள். உங்கள் பணிக்கு சிறந்த அங்கீகாரம் பெறுவீர்கள்.

நீங்கள் உங்கள் உறவுமுறையில் ஆர்வமுடன் இருப்பீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையே திருப்தி காணப்படும்.

உங்களிடம் அதிக பணம் காணப்படும் . உங்களிடம் உற்சாகமான அணுகுமுறை காணப்படும். நல்ல முன்னேற்றம் காண்பீர்கள்.

இன்று மனதில் அமைதியையும் நேர்மறை ஆற்றலையும் உணர்வீர்கள்.




உங்கள் பணிகளை முடிக்க இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். இன்று உங்களின் வளர்ச்சி உறுதி. நீங்கள் அமைதியான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் நல்ல முடிவுகளை எடுக்க இயலும்.

நீங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் பெறுவீர்கள். தரமான பணிகளை வழங்குவீர்கள்.

உங்கள் துணையிடம் பேசுவதை மகிழ்ச்சியாக உணர்வீர்கள். இருவரும் இணைந்து நேரத்தை சிறப்பாக கழிப்பீர்கள்.

நிதி நிலைமை பாதுகாப்பாக இருக்கும். பணத்தை பொறுத்தவரையில் பயனுள்ள முடிவுகளை எடுப்பீர்கள்.




உங்கள் செயல்களை நீங்கள் சுமூகமாக மேற்கொள்ள அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இன்று நீங்கள் நம்பிக்கை இழக்க நேரலாம். எனவே உங்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பணிகள் அதிகமாக காணப்படும். இதனால் பணியில் தவறுகள் செய்ய நேரலாம். சக பணியாளர்களுடன் தொடர்பு கொள்ளும்போது கவனம் தேவை.

உங்கள் இருவரிடையே இருக்கும் கருத்து வேறுபாடு காரணமாக உங்கள் துணையுடன் திருப்தி குறைந்து காணப்படும். உறவில் நல்லிணக்கம் பேண இருவரும் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

பணத்தை நிர்வகிப்பதை கடினமாக உணர்வீர்கள். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

இன்று நீங்கள் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் இருப்பீர்கள்.



Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean Group of Companies — KELSEY HOMES 40 Years Housing Excellence

+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA — No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.



Northern PC Park

வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581

077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park



# ஓட்டப் பந்தயத்திடல் விபத்தில் பாதிக்கப்பட்டோருக்கு நட்டஈடு

தியத்தலாவை ஓட்டப் பந்தயத்திடல் விபத்தில் உயிரிழந்த மற்றும் காய மடைந்த நபர்களுக்கு நட்டஈடு வழங்க விளையாட்டுத்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

உயிரிழந்த 7 பேருக்கு தலா ஒரு மில்லியன் ரூபாவும், காயமடைந்தவர்களுக்கு தலா இரண்டரை லட்சம் ரூபாவும் நட்ட ஈடாக வழங்கப்படும் என அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் 21 ஆம் திகதி நடைபெற்ற கார் பந்தயத்தின் போது, ஒரு கார் தடத்தை விட்டு விலகி பார்வையாளர்கள் மீது மோதி விபத்திற்குள்ளானதில், சிறுமி உள்ளிட்ட 7 பேர் உயிரிழந்தனர், சிலர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# வேலைவாய்ப்பிற்காக இஸ்ரேலுக்கு செல்லும் இலங்கையர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

இந்த வருடத்தின் முதல் நான்கு மாதத்திற்குள் 2 ஆயிரத்து 771 இலங்கையர்கள் வேலைவாய்ப்புகளுக்காக இஸ்ரேலுக்கு சென்றுள்ளனர் என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இலங்கை, இஸ்ரேல் அரசாங்கங்களுக்கு இடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையில், இலங்கையர்களுக்கு தாதியர், விவசாயம், நிர்மாணத்துறைகளில் வேலைவாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

அதற்கமைய, 409 பேர் தாதியர் சேவையிலும், 804 பேர் நிர்மாணத் துறையிலும், 1,558 பேர் விவாசாயத் துறையிலும் பணியாற்றச் சென்றுள்ளனர்.

மேலும் 172 இலங்கையர்கள் மே மாதத்தின் முதல் வாரத்தில் விவசாயத் துறை வேலைவாய்ப்புகளுக்காக இஸ்ரேலுக்குப் பயணிக்கவுள்ளனர் எனவும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டில் 1,912 இலங்கையர்கள் வேலைவாய்ப்புக்காக இஸ்ரேலுக்கு சென்றிருந்தனர்.

அதனுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு வேலைவாய்ப்பிற்காக இஸ்ரேலுக்கு செல்லும் இலங்கையர்களின் எண்ணிக்கை பெரும் அளவில் அதிகரித்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

# இரு வேறு இடங்களில் நீரில் மூழ்கி இருவர் பலி



இரத்தினபுரி – நிவித்திகல, ஜயபுரகம மற்றும் நுவரெலியா – ஹங்குரான்கெத்த பகுதிகளில் நீரில் மூழ்கி இருவர் உயிரிழந்துள்ளனர்.

31 மற்றும் 45 வயதுடைய இருவரே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

நிவித்திகல, ஜயபுரகம பிரதேசத்தில் ஆற்றில் தவறி வீழ்ந்து ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, ஹங்குரான்கெத்த – அம்பேவல ஓயாவில் நீராடச் சென்ற ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்த உயிரிழப்புகள் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.






# மக்கள் வங்கியின் அனுசரணையுடன் ‘நாளைய புத்தாக்குனர்களுக்கு வலுவூட்டுதல்’

இலங்கையில் டிஜிட்டல் வங்கிச் சேவையில் முன்னோடியான மக்கள் வங்கி, தனது “நாளைய புத்தாக்குனர்களுக்கு வலுவூட்டுதல்” என்ற இளைஞர்களுக்கான தொழில்நுட்ப திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றுவதற்காக 100 மாணவர்களை வெற்றிகரமாக தெரிவு செய்துள்ளது.

சர்வோதய இயக்கத்தின் தகவல் தொழில்நுட்ப கல்விப் பிரிவான Sarvodaya Fusion இன் கூட்டாண்மையுடனான இந்த முயற்சி, எதிர்கால தொழில்களுக்கு அத்தியாவசியமான தொழில்நுட்பவியல் திறன்களை தேசத்தின் இளைஞர்களுக்கு வழங்கி, அவர்களை தயார்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.

சமூக மேம்பாடு மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றை ஊக்குவிப்பதன் மூலமான தனது நிறுவன சமூகப் பொறுப்புணர்வில் மக்கள் வங்கி காண்பிக்கும் அர்ப்பணிப்பை இம்முயற்சி பிரதிபலிக்கின்றது.

நாடெங்கிலுமிருந்து இதற்காக விண்ணப்பிப்பதற்கு ஆர்வம் கொண்டவர்கள் மத்தியிலிருந்து கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் மத்தியில், புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தெரிவு 2024 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் இடம்பெற்றது.

வட மத்திய, வட மேல், மேல் மாகாணங்கள் உட்பட பல்வேறு மாகாணங்களில் இதற்கான தெரிவு நடைமுறை இடம்பெற்றது.

‘நாளைய புத்தாக்குனர்களுக்கு வலுவூட்டுதல்: இளைஞர் தொழில்நுட்ப திறன்கள் அபிவிருத்தி செயற்திட்டம்’ ஆனது கணினி விஞ்ஞான டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்தில் 15-19 வயதிற்கிடைப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு 100 புலமைப்பரிசில்களை வழங்கும்.

programming, web development, networking, graphics மற்றும் computer mathematics அடங்கலாக, கணினி விஞ்ஞானத்தின் பல்வேறுபட்ட அம்சங்கள் இக்கற்கை நெறியில் அடங்கியுள்ளன. ஒன்பது மாதங்கள் கொண்ட இக்கற்கைநெறி, தேசிய தொழிற்தகைமை மட்டம் 4 இனைப் பின்பற்றுவதுடன், கணினி விஞ்ஞானத்தில் வலுவான அத்திவாரத்தை வழங்குகின்றது.

இந்த டிப்ளோமா தகைமையைக் கொண்டிருக்கும் ஒருவருக்கு, பல்கலைக்கழகங்கள் மற்றும் பல்வேறுபட்ட ஏனைய உயர் கல்வி நிலையங்களில் பட்டப்படிப்பு மட்டத்தில் அங்கீகாரங்களைப் பெற்றுக்கொள்வதை நோக்கி முன்னேறுவதற்கு இது இடமளிக்கின்றது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் நிறைவில் கணினி நிரலோட்ட நிகழ்வும் மற்றும் பட்டமளிப்பு வைபவமும் இடம்பெறவுள்ளன.









# டயலொக் ஆசிஆட்டாவின் சேவைகளுக்கு 'LankaPay Technnovation விருதுகள் 2024'

டயலொக் ஆசிஆட்டாவின் genie மற்றும் Dialog Finance PLC ஆகிய சேவைகள் LankaPay Technnovation Awards 2024 விருது விழாவில் டிஜிட்டல் நிதிச் சேவைகளுக்கான பங்களிப்புகளுக்காக அங்கீகரிக்கப்பட்டு கௌரவிக்கப் பட்டுள்ளன.

புதுமையான மற்றும் உள்ளடக்கிய நிதித் தீர்வுகளுடன் இலங்கையின் டிஜிட்டல் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் டயலொக் முன்னெடுத்து வரும் முயற்சிகளின் பிரதிபலிப் பாகவே இந்த அங்கீகாரம் கருதப்படுகின்றது.

இதில் முதலாவது விருதானது, "மிகவும் பிரபலமான டிஜிட்டல் கொடுப்பனவு தயாரிப்பு – Fintech பிரிவு" க்கு இலங்கை நுகர்வோரால் வாக்களிக்கப்பட்டு வெல்லப்பட்டுள்ளது.

இரண்டாவது விருதானது, 'Lanka QR - Fintech பிரிவு மூலம் சில்லறை விற்பனையாளர் கொடுப்பனவுகளுக்கான சிறந்த மொபைல் Application' என வெல்லப்பட்டுள்ளது. இவ்வாறு Genie இரண்டு விருதுகளை வென்றமையானது,

இலங்கையில் விருப்பமான டிஜிட்டல் கட்டண தளமாக genie அங்கீகாரத்தை பெற்றுள்ளதை குறிக்கின்றது எனலாம்.

மேலும், Dialog Finance PLC ஆனது, "சிறந்த டிஜிட்டல் கொடுப்பனவு மூலோபாயத்திற்கான ஆண்டின் நிதி நிறுவனத்திற்கான" தங்க விருதையும், "சிறந்த டிஜிட்டல் கொடுப்பனவுகள்" மற்றும் "வங்கி அல்லாத நிதி நிறுவனங்களின் பிரிவில் சிறந்த வாடிக்கையாளர் வசதி" ஆகியனவற்றிற்கு வெள்ளி விருதுகளையும், மேலும் சிறந்த "நிதி உள்ளிணைக்கை" என்பதற்கான தகுதி விருதையும் பெற்று சிறப்பை சேர்த்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி. குழுமத்தின் பிரதம டிஜிட்டல் சேவைகள் அதிகாரியும் மற்றும் Dialog Finance இன் தலைவியுமான ரேணுகா பெர்னாண்டோ இது குறித்து கருத்து தெரிவிக்கையில்,

"நமது குழுவின் அர்ப்பணிப்பு மற்றும் புத்தாக்க உணர்வைப் பிரதிபலிக்கும் விதமாக LankaPay Technnovation விருதுகளில் நமக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளதையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். இந்த அங்கீகாரமானது, நிதிச் சேவைகளை அனைவருக்கும் அணுகக்கூடிய வகையிலும், வசதியானதாகவும் மாற்றும் நோக்கிலான இலங்கையின் டிஜிட்டல் நிதித்துறையை விரிவுபடுத்துதல் மற்றும் செழுமைப்படுத்துதல் ஆகிய எங்களது பணியைத் தொடர ஊக்குவிக்கின்றது என கூறமுடியும்" – என்றார்.

LankaPay Technnovation Awards 2024 இன் இந்த அங்கீகாரங்கள், பயனுள்ள டிஜிட்டல் கட்டணத் தீர்வுகளை வழங்குவதில் genie மற்றும் Dialog Finance இன் முயற்சிகளுக்கு மதிப்பளிப்பது மட்டுமன்றி, டயலொக் ஆசிஆட்டாவின் நிதி உள்ளிணைக்கை மற்றும் புதுமைக்கான அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகின்றமை ஓர் சிறப்பம்சமாகும்.

இலங்கையர்களின் வாழ்க்கையையும் நிறுவனங்களையும் வலுப்படுத்துதல் மற்றும் வளப்படுத்துதல் என்ற டயலொக் நிறுவனத்தின் தொலைநோக்குப் பார்வைக்கு இணங்க, டிஜிட்டல் மற்றும் நிதி ரீதியில் இலங்கையை முன்னோக்கி கொண்டு செல்லும் டயலொக்கின் முயற்சிகளுக்கு இந்த பாராட்டுக்கள் சான்றாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கூட்டாண்மை கிரிக்கெட் போட்டித் தொடரில் 28 முன்னணி நிறுவனங்கள் பங்கேற்பு

கூட்டாண்மை நிறுவனங்களுக்கான அணிக்கு அறுவர் கொண்ட மென்பந்து கிரிக்கெட் போட்டித் தொடர் அண்மையில் பத்தரமுல்ல ஜி.எச். புத்ததாச மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் நாட்டின் முன்னணி நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி 28 அணிகள் பங்கேற்றிருந்தன.

இந்த போட்டித் தொடரை Rainbow Pages நலன்புரிச் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது. SLT-MOBITEL குழுமத்தினால் இலங்கையின் தேசிய வியாபார தொலைபேசி விவரக் கோவையான Rainbow Pages நிர்வகிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டித் தொடரின் அரையிறுதிப் போட்டியின் வெற்றியாளர்களாக Winners Global, Sonasu Connect, GM Garments மற்றும் Salota International ஆகியன தெரிவு செய்யப்பட்டிருந்தன.

சம்பியன்ஷிப் பட்டத்தை Winners Global பெற்றுக் கொண்டதுடன், GM Garments மற்றும் Salota International ஆகியன இணைந்த இரண்டாமிடங்களுக்காக அறிவிக்கப்பட்டிருந்தன.

